விலை சதம் 70

பக்கங்கள் — 10

அருந்துங்கள்!
அண்ணா கோப்பி
சுவை குன்றாமல்
உடனுக்குடன் அரைத்த
கோப்பியை
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்!
அண்ணா கோப்பிக்கடை
யாழ்ப்பாணம்.

# ஈழநாடு
## வார மலர்
THE EELANADU VARAMALAR

SRI LANKA - JAFFNA
RECEIVED
PERIODICALS

மாணவ மணிகளே!
உங்கள் சீருடைகளை
திருப்திகரமாகவும்,
பிரகாசமாகவும் சலவைசெய்ய
மில்க்வைற் நீலசோப்பை
வாங்கி உபயோகியுங்கள்.
மேலுறைகளை சேகரித்து அனுப்பி
மில்க்வைற்
அப்பியாசக் கொப்பிகளையும்,
அறிவு நூல்களையும்,
1981ம் ஆண்டுக்குரிய
புதிய கலண்டரையும்
பெற்றுக்கொள்ளுங்கள்.
மில்க்வைற்-யாழ்ப்பாணம்

மலர் 22 கார்த்திகை 22 முஹறம் 28 ஞாயிற்றுக்கிழமை (7—12—80) இதழ் 298

## காங்கேசன்துறையில் 2 நூற்றுண்டுகள் சீமெந்து உற்பத்திக்குப் போதுமான சுண்ணும்புக் கல்!

### புவியியல் திணைக்களம் மதிப்பீடு

(கொழும்பு)

காங்கேசன்துறை வட்டாரத்தில் நிலத்துக்கடியில் சிமெந்து உற்பத்திக்குத் தேவையான 5 கோடி 10 லட்சம் தொன் சுண்ணும்புக்கல் உள்ளன என்றும் இக்கற்கள் காங்கேசன் தொழிற்சாலையில் இரண்டு நூற்றுண்டுகளுக்குச் சீமெந்து உற்பத்தி செய்யப் போதுமானது என்றும் புவியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீர்நிலைக்கு மேலாக சுமார் 50 அடிக்கு சுண்ணும்புக் கல் உள்ளது என்றும், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்ட நாள்முதல் இதுவரை சீமெந்து உற்பத்திகென 60 லட்சம் தொன் சுண்ணும்புக் கல்லே அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது என்றும் புவியியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (இ)

# எம். ஜி. ஆரைக் கொல்ல முயற்சி!

## மாஜி கிராம அதிகாரி கைது!!

## ரயிலில் கத்தி வீச்சு

(சென்னை)

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனைக் கொலைசெய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்தது.

முன்னாள் கிராம அதிகாரி ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் இம் முயற்சியின்போது வீசப்பட்ட கத்தி குறிதவறியதையடுத்து திரு. இராமச்சந்திரன் தெய்வாதீனமாக உயிர்தப்பினார்.

இச்சம்பவம் தொடர்பாக முன்னாள் கிராம அதிகாரி வீர பராக்கிரம பாண்டியன் (50 வயது) உடனடியாகக் கைதுசெய்யப்பட்டார்.

திரு. இராமச்சந்திரனை நோக்கி வீசப்பட்ட கத்தியில் கட்டப்பட்டிருந்த கடதாசி ஒன்றில் ''எல்லோரும் கோர்ட்டுக்குப் போவார்கள்; ஆனால் எனது கத்தி உனது உடல் முழுவதையும் பதம் பார்க்கும்'' என்று எழுதப்பட்டிருந்ததாம்.

திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உத்தியோகபூர்வ சுற்றுப் பயணம் மேற்கொண்ட திரு. இராமச்சந்திரன் 'நெல்லை எக்ஸ்பிரஸ்' ரயிலில் சென்றுகொண்டிருந்தபோது ரயில் திருநெல்வேலி மணியாச்சி ரயில் நிலையத்தில் நின்றசமயமே அவரை நோக்கி கத்திவீசப்பட்டதாம். ரயிலில் எம். ஜி. ஆர்.

### தூங்கியசமயம்...

கத்திவீசப்பட்டசமயம் திரு. இராமச்சந்திரன் குளிரூட்டப்பட்ட ரயில்பெட்டியில் தூங்கிக்கொண்டிருந்தார் என்றும் ரயில்நிலையத்தில் அவருடன்



ரயிலில் சென்ற தமிழக மேலவை உறுப்பினர் ஒருவர் ரயில்கதவைத் திறந்தபோது ஒன்றரை அடி நீளமான கத்தி

(10ம் பக்கம் பார்க்க)

## கருணாநிதி கண்டனம்

(சென்னை)

தமிழக முதல்வச் திரு. எம். ஜி. ஆரைக் கொலை செய்ய மேற்கொள்ளப்பட்ட முயற்சி குறித்து தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

இம்முயற்சியில் எம். ஜி. ஆர். உயிர்தப்பியது குறித்து திரு. கருணாநிதி நேற்று வெளியிட்ட அறிக்கையில் மகிழ்ச்சி தெரிவித்தார்.

தமிழ்நாட்டின் மற்றைய கட்சித் தலைவர்களும் இக் கொலைமுயற்சியைக் கண்டித்துள்ளனர்.

## பறவைகளின் வருகை

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் கிராமப்புறங்கள் எங்கும் ஒரே பசுமையாகக் காட்சி அளிக்கின்றது.

நீர்நிலைகள் எல்லாம் நிரம்பியுள்ளன. இதனால் பல்வேறு விதமான பறவைகளும் இரைக்காக இந்த நீர்நிலைகளில் வந்து குவிகின்றன.

நீரில் நீந்தியபடி இரை தேடுபவை, நின்றபடியே இரையை எதிர்பார்த்துக் காத்திருப்பவை, நீரினுள் சுழியோடி இரையைப் பெற்றுக் கொள்பவை, நீருக்கு மேலாக பறந்தபடி இருந்து இரையைக் கண்டதும் சட்டென இறங்கி பற்றிக்கொள்பவை, மிகவும் அமைதியாகக் காத்திருந்துவிட்டு திடீரென அம்புபோல நீரில் பாய்ந்து இரையைக் கவ்விக்கொள்பவை,— இவ்வாறு எத்தனை விதமான பறவைகள்!

நிறத்தால், உடல் அமைப்பால், எழுப்பும் ஓசையால் எத்தனை வித்தியாசங்கள்!

இருந்தபோதிலும் இந்தப் பறவைகள் அனைத்துக்குமே நோக்கம் ஒன்றுதான். அதன் காரணமாகவே அவை இந்த நீர்நிலைகளில் ஒருமித்துக் காணப்படுகின்றன.

இந்தப் பறவைகளில் ரஷ்ய வாத்துக்கள்கூடக் காணப்படுகின்றனவாம். பருவகாலம் மாறும்போது இவைகள் தம் இருப்பிடங்களை நாடிப் போய்விடும், எங்கோ ஒரு இடத்தில் வாழும் பறவைகள் இன்னொரு இடத்துக்கு குறித்து வைத்தாற்போல் போய்ச் சேருவதும் — மீண்டும் திரும்பிச் செல்வதும் எப்படி முடிகிறது?

பல்வேறு விதமான சுவாத்தியங்கள், நிலப்பகுதிகள், மலைகள், கடற்பகுதிகளையெல்லாம் கடந்து இவை இங்கு வந்து திரும்புவதற்குரிய ஆற்றலை இவை எப்படி பெற்றன?

இயற்கை அற்புதங்களில் ஒன்றல்லவா இது!

பனைமரங்களில் தொங்கவிடப்பட்டுள்ள முட்டிகளிலுள்ள கள்ளைக்கூட இப்பொழுது இங்கு வந்துள்ள பறவைகள் குடித்து மகிழ்வதாகவும் சுவாரஷ்யமான தகவல் கிடைத்துள்ளது. ஒருவேளை இந்தக்கள்ளைச் சுவைப்பதற்காகவே இந்தப்பருவத்தில் இப்பறவைகள் இங்கு வருகின்றனவோ?

அவ்வாறாயின் நம் பனைமரத்தின் மகத்துவத்தை எண்ணி நாம் இன்னும் ஒருபடி அதிகமாகவே மகிழ்ச்சி கொள்ளலாம்!

## சாதியைக் குறிக்கும் கிராமங்களின் பெயர்கள் மாற்றி அமைக்கப்படும்

### பிரதி அமைச்சர் தகவல்

(கொழும்பு)

வடபகுதியில் நிலவிவரும் சாதிப்பிரச்னையை சட்டத்தின் மூலம் தீர்க்கமுடியாது எனினும் சாதியின் பெயரில் உள்ள கிராமங்களின் பெயர்கள் மக்கள் விரும்பும் விதத்தில் மாற்றி அமைக்கப்படும்.

இவ்வாறு உள்நாட்டு பிரதி அமைச்சர் திரு. பேர்ஸி சமரவீர நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கூறினார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பல திருமணப்பதிவாளர்கள் சிறுபான்மைத் தமிழர்களின் இல்லங்களுக்குச் சென்று திருமணப்பதிவு செய்வதில்லை என்றும், வடக்கில் பல இடங்களுக்கு சாதியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றும் சபையில் உடுப்பிட்டி எம். பி திரு க. இராசலிங்கம் புகார்செய்திருந்தார்.

சாதி ஒழிப்புக்கு முதலிடம் அளித்துவரும் தமிழர் விடுதலைக்கூட்டணி மேற்கூறிய செயல்களுக்கு எதிராக அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு பூரண ஆதரவளிக்கும் என்றும்

ஹோம் பினன்ஸ்
லிமிட்.
82, கன்னதிட்டி ரேட், யாழ்ப்பாணம்.
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000|—க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கூலி உயர்வு தராவிட்டால் பொது வேலைநிறுத்தம்

## ஐ.சு. தொழிலாளர் சங்கம் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

சுருட்டுத் தொழிலாளர்களின் பொதுவேலை நிறுத்தம் ஒன்று நடத்தவேண்டும் என்று நல்லூரில் நடைபெற்ற அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர்கள் சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் திரு ஆ. துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற சுருட்டுத் தொழிலாளர் கூட்டத்தில் தீர்மானிசகப்பட்டது.

சுருட்டுத் தொழிலாளர்கள் மூன்னிலையில் ஆயிரம் சுருட்டுக்கு 60 ருபா கூலி கொடுப்பதாக முதலாளிகளால் அறிவிக்கப்பட்ட 397 விளம்பரங்கள் வாசித்துக் காட்டப்பட்டன.

இக்கூட்டத்தில் பேசிய சங்சத் தலைவர் திரு. ஆ. துரைராஜசிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள சுருட்டு முதலாளிமார்கள் 430 வரையில்தான் இருக்கிறார்கள். அப்படியிருக்க எமது சங்கத்தை ஆதரித்து 379 கம்பனிகள் விளம்பரம்விட்டுள்ளன. சுருட்டுத்தொழிலாளர்களின் கூலியை எவ்வளவு வேண்டுமானாலும் உயர்த்தி நோட்டீஸ் அடிக்கலாம். ஆயிரம் சுருட்டுக்கு 75 ருபாவாகவும் உயர்த்தலாம். ஆனால் அதை வாங்கிக்கொடுக்கவேண்டும். ஆயிரம் சுருட்டுக்கு 75 ரூபாய் வேண்டவேண்டிய நிலை ஏற்பட்டால் சுட்டாயம்நாமும் கூலி உயர்த்தியே தீருவோம்.

எமதுசங்கம் இதுவரை 41சுருட்டுத் தொழிலாளர்களுடைய போராட்டங்களை நடத்திவிட்டது. எமது சங்கம் பதிவு பெற்றது. இல்லையானால் எமது சங்கத்தின் பிரதிநிதிகள் அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட சம்பள நிர்ணயசபை உறுப்பினராகத் தொழில் மந்திரியால் நியமிக்கப்பட்டிருக்க முடியாது. சுருட்டுத் தொழிலாளர்களின் சம்பளத்தைத் தீர்மானிப்பதும், உறுதிப்படுத்துவதும், சட்டமாக்குவதும் சம்பள நிர்ணயசபைதான் என்பதைத்தொழிலாளர்கள் உணரவேண்டும். சம்பள நிர்ணய சபையில் உற்பத்தியாளர்பிரதிநிதிகளும், தொழிலாளர்பிரதிநிதிகளும் சமமாகவே இருக்கிறார்கள். அத்துடன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட சில பிரதிநிதிகளும் சபையில் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஆதரிக்கும் கூலியே அங்கு நிர்ணயிக்கப்படும்''.

திரு. சி. கந்தையா, ச. சண்முகவேல், கிருஷ்ணபிள்ளை, ஆ கந்தையா ஆகியோரும் பேசினர்.


## அலுமினியம் தகடுகள்

### கைவசம் விற்பனைக்கு உண்டு

ஒரு கிலோகிராம் விலை ரூ 56/- (1 இறாத்தல் ரூ 25/-) எவ்வளவு தொகையும் உடனடியாக வாங்கலாம்.

200/250 கிலோ கிராமாக வாங்கினால் பெட்டிகளுடன் கொடுக்க வசதியாக இருக்கும்.

தேவையான தொகை, விட்டம் (Diameter) தடிப்பு, (கேஜ்- WG) என்பனவற்றைக் குறித்து கீழ்க்கண்ட முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

குஷிபா (டிஸ்ரிபியூட்டர்ஸ்) லிமிட்டெட்
த. பெ. இலக்கம் 1784
654, காலி வீதி, கொழும்பு—8.

குஷிபா (டிஸ்ரிபியூட்டர்ஸ்) லிமிட்டெட்
மாவிட்டபுரம் கிளை - 1
மாவிட்டபுரம், தெல்லிப்பளை.

7588



உ
சிவமயம்

## திருமண அழைப்பு

நிகழும் ரௌத்திரி வருடம் கார்த்திகை 27ம் நாள் (12-12-80) வெள்ளிக்கிழமை மாலை 5-00 மணி முதல் 6-00 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில்,

எனது புதல்வன்
திருநிறை செல்வன்
**தருமராஜா**
அவர்களுக்கும்

திருநிறை செல்வி
**நந்தினிதேவி**
(நவாலி காலஞ்சென்றகாரியாதிகாரி பரராஜசேகரம், திருமதி பரராஜசேகரம் ஆகியோரின் புதல்வி)
அவர்களுக்கும்

நல்லூர் நல்லை ஆதீனத்தில் இறையருளால் திருமணம் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்கள் சுற்றஞ்சூழ சமுகமளித்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றேன்.

இதனையே பொதுவான அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

திருமதி அ. அம்பலவாணர்,
(அமரர், நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆர். அம்பலவாணரின் பாரியார்).

7, அத்தியடி புதிய வீதி,
யாழ்ப்பாணம்.

7553


## அனலைதீவில் பரீட்சை நிலையம்

(யாழ்ப்பாணம்)

இம்மாதம் பன்னிரண்டாம் தேதி நடைபெறும் க. பொ. தரா. (சாதாரண) தரம் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக நடைபெறும் பரீட்சைக்கு அனலைதீவு சதாசிவம் மத்திய மகாவித்தியாலயமும் பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இத்தகவலை பரீட்சை ஆணையாளர் நேற்று முன்தினம் அறிவித்துள்ளார், இம்மாதம் 3ந் திகதி ஆரம்பமான மற்றைய பரீட்சைக்கு இந்நிலையம் அங்கீகரிக்கப்படவில்லை.

## மன்னாரில் பலத்த காற்று வீசவில்லை

(மன்னார்)

கடந்த புதன்கிழமையும் மறுநாள் வியாழக்கிழமையும் மன்னார் பிரதேசத்தில் பலத்த காற்று வீசும் என்ற வானிலை அவதான நிலையம் அறிவித்திருந்தபோதிலும் அந்நாட்களில் இப்பகுதியில் சாதாரண காற்றே வீசியது: புதன் இரவு மட்டும் சிறுமழையும் பெய்தது.

மன்னார் கடலோரப்பகுதி மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லவில்லை தமது வள்ளங்களை மன்னார் வள்ளம்கட்டும் துறையில் கட்டிவைத்திருந்தனர்.

## தமிழ் தெரியாத அரச ஊழியர்கள்

### திருமலை அம்பாறை மக்கள் கஷ்டம் பற்றி எம். பி. புகார்

(கொழும்பு)

திருகோணமலை அம்பாறை மாவட்டங்களில் 70 வீதமான தமிழ்பேசும் மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் அம்மாவட்டங்களில் உள்ள திணைக்களங்களின் ஊழியர்கள் பெரும்பான்மையோருக்கு தமிழ் தெரியாது. இப்பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் அரசதிணைக்களங்களுக்குப் போவதில்லை.

இவ்வாறு திருமலை எம்.பி. திரு. ஆர். சம்பந்தன் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரைநிகழ்த்துகையில் கூறினார்.

உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீடு மீதான விவாதத்தில் பேசிய திரு. சம்பந்தன் மேலும் கூறியதாவது:

**'புல்மோட்டை 'கனிஜபுரம்' ஆகிவிட்டது**

புல்மோட்டையில் 90 வீதமான தமிழ்பேசும் முஸ்லிம்கள் வாழ்கிறார்கள். அப்படியிருந்தும் அப்பகுதி மக்களின் ஆலோசனை எதுவுமின்றி புல்மோட்டையை 'கனிஜபுர' என்று அரசு பெயர்மாற்றம் செய்துள்ளது.

வடக்கு......கிழக்கு மாகாணங்களில் தமிழில்நிர்வாகம் நடைபெறவேண்டும் அரசியல் அமைப்பு கூறுகிறது. தமிழில் நிர்வாகம் நடத்த தமிழ் ஊழியர்கள் இல்லாமல் அரசு என்ன செய்யப்போகிறது.

(ட ம)


நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் றோட்,
போன்; 7199.

யாழ்ப்பாணம்.
தந்தி: வைரம்.


# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

EN 7000 தொடரிலக்கமுள்ள வோக்ஸ்வகன் கார் ஒன்று நல்லநிலையில் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்......41, அம்மன் வீதி, யாழ்ப்பாணம். 7549

3 பரப்புக் காணி K. K. S வீதியில் கொக்குவில் சந்திக் கண்மையில் தலையாளி என்னும் இடத்தில் விற்பனைக்குண்டு. விலை விபரத்திற்கு K. யோகசீலன் (மாஸ்ரர்), "போபல்'', சேச் ஒழுங்கை, உடுவில். 7500

பருத்தித்துறையிலிருந்து 5 மைல் தூரத்தில் வலிகண்டியிலும் குடத்தனையிலும் 400 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு. விலை விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்: 195, பிரதான வீதி, யாழ்ப்பாணம். 7485

சென். பற்றிக்ஸ் பாடசாலைக்கு அருகில் 1½ பரப்புக் காணியும் 7 அறைகளைக் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு. உரிமையாளர்; மா. புவனேந்திரன், தொடர்பு மா. கணேஸ், 41/12, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம். 7495

நல்ல நிலைமையிலுள்ள பிலிப்ஸ் (MAIN SET) ஏழு வால்வுகள், பற்றறியில் இயங்கும் புதிய சுவர் மணிக்கூடு, மாநகர எல்லைக்குள் மூன்று பரப்புக் காணி. தொடர்புகொள்க: 78, அரசடி வீதி, (இந்து மகளிர் கல்லூரி அருகாமையில்) யாழ்ப்பாணம். 7545

மயிலங்காடு பிரதான வீதியில் 2¼ பரப்புக் காணி இரண்டு கிட்டங்கிக்கடை, கிணறு, மலசலகூடம், வீடு வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு கடிதமூலம் தொடர்புகொள்க விளம்பர இல; 7526, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 7526

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## கேள்வி அறிவித்தல்

### அரியாலை, நரிக்குண்டு இறைச்சிக் கடைகள் குத்தகை -- 1981

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகளின் 1981ம் ஆண்டுக் குத்தகைக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 17-12-80 புதன்கிழமை நண்டகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப் பத்திரங்கள் பிணைப்பணம் ரூபா 100/-, பத்திரக்கட்டணம் ரூபா 2 /- செலுத்தியதன் பேரில் 16-12-1980 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00 மணி வரை மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் வழங்கப்படும்.

ஏனைய விபரங்களை மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

1. அரியாலை புதிய சந்தை மாட்டிறைச்சிக் கடை.
2. நரிக்குண்டு மாட்டிறைச்சிக் கடை.

க. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம். 03-12-1980
(7544)

## விற்பனைக்கு

நல்லூரில் 4 பரப்புக் காணி கல்விக் கந்தோருக்கு அருகாமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஆ. சுசீந்திரன், 15, முருகேசர் லேன், நல்லூர். 7498

யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் சகலவசதியுடன் வீடுவளவு விற்பனைக்கு உண்டு. டென்பிள்ளைகளுக்கு மட்டும் சாப்பாட்டுடனும் தனித்தும் அறைகள் வாடகைக்குப் உண்டு தொடர்பு கொள்ளவும்: சி கனகரெத்தினம், 465/1, கே. கே. எஸ். றோட், சிவலிங்கப்புளியடி. 7550

நாரந்தனை செட்டியார் தோட்ட ஒழுங்கையில் 26 பரப்புக்கொண்ட வளவு விற்பனைக்குண்டு. தொடர்பு: 25, பொன்னப்பா ஒழுங்கை, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 7554

HONDA C 90 முற்றிலும் சீரமைக்கப்பட்டு நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டது. மிகச்சிறந்த நிலையில்விற்பனைக்குண்டு (சிறிதளவே சையிலுப்பிலுண்டு) S H. அபுஹாசன், இல. 6, ஐதுறூஸ் மசாம்வீதி, சோனகதெரு, யாழ்ப்பாணம். 7556

முட்டையிடும் பருவ நல்லினக் கோழிகளும், இறைச்சிக் கோழிகளும், கோழிக்குஞ்சுகள் வளர்க்கும் பெட்டியும் (Brooder) பண்ணை மூடப்படுவதால் உடன் விற்பனைக்குண்டு. 66, இந்துக் கல்லூரி ஒழுங்கை, யாழ்ப்பாணம். 7536

## தேவை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் சண்டி வீதியில் ஒரு வீடு அல்லது வீட்டில் ஒரு பகுதி வாடகைக்கு அலுவலகப் பாவிப்புக்குத் தேவை. விபரங்களை பெருந்தெருக்கள் திணைக்களம், பளை, நிறைவேறுப்பொறியியலாளருக்கு அறிவிக்கவும். 7555

யாழ்ப்பாண இந்து வைசிய கோத்திரம் அழகும் குணமும் நிறைந்த 29 வயதுடைய அரசாங்கத்தில் தென்னை பயிர்ச்செய்கை சபையில் வேலை செய்பவருக்கு ஒத்த பண்புள்ள மணமகள் தேவை. முதுசக் காணிகள் உண்டு. இவருக்கு 26 வயசுசகோதரியுண்டு. மாற்றுச்சம்பந்தமும் கவனிக்கப்படும். நல்ல சீதனம் கொடுக்கப்படும். (கடிதமூலம் தொடர்புகொள்ளவும் விளம்பர இல: 7507 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 7507

ஆங்கில மொழியில் நல்ல தேர்ச்சியும் அனுபவமும் உள்ள சுருக்கெழுத்தாளர்/லிகிதர் தேவை. விண்ணப்பிக்கவும். நிர்வாக இயக்குனர், எல்மோசன் ஹரன் ஸ்ரீல் கொம்பனி லிமிட், 61, ரெம்பிள் றோட், யாழ்ப்பாணம். 7542

## வகுப்புகள்

O/L, A/L வகுப்புகளுக்கும் வளாக மாணவருக்கும் 25 வருடங்களுக்கு மேல் ஆங்கிலம் கற்பித்து அனுபவ முதிர்ச்சி பெற்ற ஆசிரியரினால் நல்லூரிலு, தாவடியிலும் ஆங்கில வகுப்புக்கள் மட்டும் நடத்தப்படும். முழுவிபரங்கட்கும் நேரிலோ அஞ்சல் மூலமோ கீழ்க்காணும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும் சி.வி. பிள்ளை, 179/4, கோவில்வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 7497

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சில நேரங்களில் சில பஸ்களில்!

பெரியகல்லாறு வி. கே. ரவிப்பிரியா

பஸ் புறப்படுவதற்கு ஆரம்ப அறிவிப்பாகச் சாரதி ஆசனத்தில் அமர்ந்துகொள்கின்றார். நானும் அவசரமாக ஓடிவந்து மிதிபலகையில் தொற்றிக் கொள்கின்றேன். நடாத்துநர் இறுதி அறிவிப்பாக இரட்டை மணியை அடிக்கின்றார். பஸ் அசைகின்றது.

''நேரத்திற்கு வேலைக்குப் போய்விடலாம்'' என்ற நிம்மதி என் நெஞ்சத்தை நிறைக்க, பயணச் சீட்டிற்குப் பணத்தை நீட்டுகின்றேன் நடாத்துனரிடம்.

ஒரு ரூபா என்பது சத டிக்கட்டுக்கு இரண்டு ரூபாயைக் கொடுக்கின்றேன். ஐந்துசதம் சில்லறை கேட்கின்றார் நடாத்துநர்.

பொக்கற்றைத் துளாவுகின்றேன். ஐந்துசத நாணயம் அபூர்வப் பொருள் என்பதை அது எனக்கு அறிவுறுத்துகின்றது.

''இல்லை'' என்று நான் கையை விரிக்க, ''இறங்கும்போது இருபது சதத்தை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று அவர் கூறுகின்றார்.

எதையோ உண்டியலுக்குள் போட்ட உணர்வோடு அந்தச் சீற்றில் உட்காருகின்றேன். ''ஐந்து சதத்தைச் சாட்டாக வைத்துப் பலரிடமும் இருபது சதமாகப் பிடித்துவைத்துக் கொள்ளும் இவர்கள், ஒருவருக்காவது ஐந்து சதத்தை விட்டுக்கொடுத்து, இருபத்தைந்து சதமாகக் கொடுத்தால்குறைந்துவிடுவார்களா?'' என்று எனக்குள் நானே கேட்டுக்கொள்கின்றேன். இப்படிப் பலரும் பல தடவை தங்களுக்குள் கேட்டுக்கொள்கின்றார்கள்.

அந்த பஸ்ஸில், அநேகமாகக் காரியாலயங்களில் கடமை புரிவோர்தான் நிறைந்திருக்கின்றனர்.

படியில் 'பைல்கள்'. கையில் 'பொண்ட் சூட்கேஸ்கள்', தோளில் 'ஹாண்ட் பேக்'குகள் — நடமாடும் காரியாலயம் போல் கவர்ச்சியாக இருக்கின்றது பஸ்.

கலகலப்பான பேச்சுக்கள், கலக்கத்தை ஏற்படுத்தும் விலைவாசிகள் பற்றிய விமர்சனங்கள், இளசுகளின் இங்கிதமியலா விமஷத்தனங்கள் எல்லாவற்றையும் விளம்பரப்படுத்தியவாறே பஸ் விரைந்து கொண்டிருந்தது.

அது 'கடுகதி' பஸ் என்பதை யன்னல்களினூடாக, வேகமாக வரும் சாலை காற்று மூச்சைத் திணறவைத்துக் காட்டிக்கொண்டிருந்தது.

அந்தக் கடுகதித் தரிப்பில் பஸ் நிற்கின்றது. நெசவுநிலையங்களில் வேலைசெய்யும் கன்னிப் பெண்கள் பலர், இறங்கி நிற்கும் பஸ் நடத்துநரை முற்றுகை இடுகின்றனர்.

''வாசிற்றிப் பிள்ளைகளெல்லாம் ஏறி முன்னுக்குப் போங்கோ பார்ப்பம்'' — அவர்களுக்கு டிக்கட்டைக் கிழித்துக் கொடுத்து, ஏதோ 'நக்கல் அடிக்கும்' தனித்துவத்தோடு கூறுகின்றார் நடாத்துநர்.

அந்த இளம் உள்ளங்களில் அவர் 'குத்தல்' உறைத்திருக்க வேண்டும்: அவர்கள் சிலரின் முகங்கள் திடீரென நிறம் மாறி, தங்கள் நிலைமையை உணர்ந்து பழைய நிலைக்குத் திரும்பிவிடுகின்றன.

''வாசிற்றிப் பெட்டைகளுக்கு மட்டுந்தானாக்கும் பஸ்.... அவங்க வாசிற்றிக்குப் போய் வந்ததும் வீட்டுக்குப் பாரமாகத்தான் இருப்பாங்க..... நாங்க வீட்டுப் பாரத்தையே குறைக்கும் பணியில்தானே இறங்கியிருக்கின்றோம்..... அவங்க படிக்கிறதும் பிழைக்கத்தான். நாங்க இந்த பஸ் படி ஏறுவதும் பிழைக்கத்தான்..... அதுக்குள்ள இவருக்கு நாங்க ஏதோ குறைவெண்ட எண்ணம்.....'' அந்தக் கன்னிப் பெண்களில் துணிச்சலான ஒருத்தியின் வாய் சற்றுப் பலமாகவும் லேசமாகவும் அசைந்தது.

திடீரெனச் சாரதி பிடித்த பிரேக்கில் அவள் கையிலிருந்த அந்தச் சிறு பொட்டலம் பிடிஎர்ந்து விட்டது. தவறி விழுந்துவிட்டது அது

அதிலிருந்து இரண்டு ரொட்டித் துண்டுகள் பஸ்ஸுக்குள் உருண்டோடுகின்றன. காலையிலிருந்து மாலை வரை அந்தக் கன்னியின் வயிற்றைப் பாதுகாக்கக் கையில் கொண்டுவந்ததும் அவளைக் கைவிட்டுவிட்டது.

அதைப் பார்த்த பலர் பகிரங்கமாகச் சிரித்தார்கள். சிலர் ரகசியமாகச் சிரித்தார்கள். சிலர் பரிதாபப்பட்டார்கள. பரிதாபமாக நின்றாள் அவள்.

சாரதி அவருடைய கண்ணாடிக்குள் அவளைப் பார்த்துப பெரிதாகப் பல்லைக் காட்டுகின்றார். அதற்குச் 'சிக்னல்' கொடுப்பதுபோல் நடாத்துநரும் சிரிக்கின்றார்.

அவசியமில்லாமல், அந்த அவசர 'பிறேக்'கின் காரணம் எனக்கு அப்போதுதான் புரிந்தது. கன்னியவள் கண்டக்டரைக் கண்டித்துக் கதைத்தது, சாரதியின் காதில் விழுந்ததால் ஏற்பட்ட விளைவுதான் அது.

அந்தக் கன்னிப் பெண் கூறியதில் என்ன தவறு? அதைச் செவிமடுத்த சாரதி, சாதித்ததை நினைக்க எனக்கு ஆத்திரம் எழுகின்றது. காந்தியவாதியான நான் கடவுளின் கையில் எனது ஆத்திரத்தைப் பாரம் கொடுத்துவிட்டு பொறுமையோடிருக்கின்றேன்.

பஸ் நிற்கின்றது. 'வாசிற்றி ஆக்களெல்லாம் இறங்குங்கோ......!' நடத்துநரின் குரல் ஒலிக்கின்றது. அந்தக் கன்னிகள் தங்கள் குரல்களை ஒடுக்கிக்கொண்டே இறங்குகின்றார்கள் 'நாளைக்கும் இதே பஸ்ஸில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படக் கூடாது.....' என்று இறைவனை இறைஞ்சுகின்றார்களா அல்லது ''நாளைக்கும் இதே பஸ்ஸில்தானே பிரயாணஞ்செய்ய வேண்டும்.....' என்று நினைத்துச் சலித்துக் கொண்டார்காளா தெரியாது.

பஸ் அசையத் தொடங்கி விட்டது. சாதாரண தரிப்புமல்லாத அந்த இடத்தில் தானாக நிற்கின்றது.

கறுப்புக் கண்ணாடி, கவர்ச்சியான உடை. மிதிபலகையில் ஏறும்போது உடையைவிட இடையே பெரிதாகத் தெரிகின்றது. சுமாரான அழகு அதற்குச் சுவை சேர்ப்பது போல், சுருண்டு நீண்ட கூந்தலை கழுத்தைக் காட்டி, கட்டியிருக்கும் விதமும் கலாதியாகவே இருக்கின்றது.

''தம்பி, டிக்கடைக் கொடுத்து பிள்ளையை முன்னுக்கு அனுப்பு.....'' —சாரதியின் குரலில் தவிப்புத் தெரிகின்றது. அது சலுகையாக, சருகைச் சேலைபோல் சரசரக்கின்றது.

சாரதியின் அவசரம் நடத்துநருக்குத் தெரிந்தும் ஒரேயொரு டிக்கட் கிழிக்க, அவருக்கும் அதிகளவு அவகாசம் தேவைப்படுகின்றது.

சாரதியின் பொறுமையை நடத்துநர் பரிசோதிக்க பஸ் பிரயாணத்தைத் தொடர்கின்றது.

'பற்றறி'ப்பெட்டியில் தனக்குப் பக்கபாட்டில் அவளை அமரவைக்க அவர் அசாத்திய கவனம் எடுத்தார். அதுவரை அவர் பார்வை பாதையில் பதியாமல், பாவையவளைத் திரும்பிப் பார்ப்பதிலேயே அடிக்கடி பதிந்தது

பஸ் நிற்கின்றது. அதுவும் பஸ் தரிப்பிடம் அல்ல. 'பற்றறி'ப் பெட்டியில் பள்ளிகொண்டிருந்தவள், சாரதியிடம் பல்லைக்காட்டாமல் பக்குவமாகச் சிரித்து விட்டு இறங்கிச் சென்று கொண்டிருந்தாள்.

அந்தத் தரிப்பு, அந்தச் சாரதிக்குத் தற்காலிகச் சிறை போலும். அவள் அந்தப் பாடசாலைக் கேற்றைத் திறக்க..... சாரதிக்கும் சிறைக்கதவு திறக்க..... திடுக்கிட்டு பஸ்ஸைச் செலுத்துகின்றார்.

''ஏதோ ஸ்ருடியோவிற்குப் போகப் போகின்றாள்.....'' என்ற எனது எண்ணத்திற்கு இடி விழ, அவள் ஸ்கூலுக்குள் நுழைகின்றாள். ''கலைமகள் போல் கண்ணியமாகக் கலைக்கூடம் சென்றுகற்றுக்கொடுக்க வேண்டியவர்கள் காட்டுகின்ற கோலமா இது?''..... என்று எனக்குப் பக்கத்தில் நின்று கொண்டிருந்த வயதான ஒருவரின் குரல் கேட்டு அவரை நிமிர்ந்து பார்க்கின்றேன்

நல்லவேளை அவர் குரல் சாரதியின் செவிப்பறையைத்தாக்கவில்லை. தாக்கியிருந்தால் அந்தவயோதிபர் பஸ்ஸுக்குள்ளேயே 'தடார்' என அஷ்டாங்க நமஸ்தாரம் செய்திருப்பார். எழுந்து அவருக்கு இடத்தைக் கொடுக்கின்றேன்.

''அடுத்த தரிப்பில் இறங்குறன் தம்பி. உபகாரம்.....'' —அவர் கூறிவிட்டு மணிக்கயிற்றை இழுக்கின்றார். வேகத்தைக் கூட்டி பிறேக்கைப் போடுவதில் அந்தச் சாரதிக்கு ஆர்வம் அதிகம். பஸ் குலுங்கி நிற்கின்றது. கூட்டம் சற்று அதிகமாகவே பஸ்ஸுக்காக காத்திருக்கின்றது.

அந்த ஆச்சி, ஐம்பதுக்கு குறையாமல் இருக்கும் பஸ்ஸின் முன் வாசலால வெற்றிலைப் பெட்டியுடன் நுழைகின்றாள்.

''ஆச்சி..... பின்னால.....'' — சாரதியின் குரலில் கடுகடுப்பு

''பெட்டியை வெச்சுத்துப் போறன்தம்பி.....'' -ஆச்சிபெட்டியைக்கையிலிருந்து இறக்கியபடி கூறுகின்றாள்.

''ஆச்சி பெட்டியைத் தூக்கித்துப் பின்னால போய் ஏறு.....'' —ஆத்திரமும்,அதிகாரமும் சாரதியின் குரலை அலங்கரிக்கின்றன.

ஆச்சி பரிதாபமாகப் பெட்டியை இழுத்துத் தூக்கி படிகளால் பக்குவமாக இறங்கி பின் வாசலை அடைகின்றாள்.

நடத்துநர் அவளை நச்சரிக்கின்றார்: ''முன்னால பெட்டியை வெச்சுத்து வா ஆச்சி''.....அவள் மீண்டும் முன்னால் வருகிறாள்.

''பெட்டியை வெய்யாதே..... பின்னால போ.....''. —விசர் நாயை விரட்டுவதுபோல் வார்த்தைகளால் அவளைச் விரட்டுகின்றார் சாரதி.

''பற்றறி'' பெட்டியின்மேல் வெற்றிலைப்பெட்டியைவைத்து விட்டாள் ஆச்சி. 'அவள் இருந்த இடத்தில் இந்த அசிங்கத்தை வைக்கின்றாயா?' என்பதுபோல்' ஆத்திரத்துடன் அவளைப் பார்த்தார் சாரதி.

''கோபிக்காத தம்பி..... பிந்திப்போனா இதை வித்துக்கலா..... எனக்கு வெயிலுக்குள்ள அலைஞ்சி திரியவும் ஏலா மகன்— இதை வித்துத்தான் தம்பி நானும் என்ட குமரும் கஞ்சி குடிக்கிற..... உனக்குப் புண்ணியம்கிடைக்கும்.....

(7-ம் பக்கம் பார்க்க)

## காலக்கண்ணாடி

அமெரிக்கா தயாரித்துள்ள ஒரு புதுவித ராணுவ விமானம் அதன் ராணுவத் திறனை பலமடங்கு அதிகரித்துள்ளதாம்.

இந்த விமானம்பற்றி சமீப காலத்தில், தேர்தல் பிரசாரத்தின்போது அதிபர் கார்ட்டர் தகவல் வெளியிட்டுள்ளார்.

கண்களுக்குப் புலனாகாமல் பறக்கும் இந்த விமானத்தை ரடார் சாதனங்களால் கூட கண்டுபிடிக்க முடியாதாம்.

எதிரிகளின் ராணுவ நடவடிக்கைகளைக் கண்டுபிடிக்க மாத்திரமின்றி எதிரியின் கேந்திர நிலையங்களில் மாட்டிக்கொள்ளாமல் குண்டு வீசிவிட்டுத் திரும்பிவரவும் இந்த விமானங்களால் முடியுமாம்: இப்படியான விமானம் ஒன்று உண்மையில் சோவியத் ராணுவத்தளங்களின் மேலாக வெற்றிகரமாகப் பறந்துவிட்டுத் திரும்பியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

★ ★ ★

5வது தமிழாராய்ச்சி மகாநாடு மதுரையில் ஜனவரி மாதம் 4ம் திகதி ஆரம்பமாகி கோலாகலமாக நடைபெறவிருக்கின்றது, உலகின் பல பாகங்களிலிருந்தும் தமிழ் அறிஞர்களும் — பேராளர்களும் மதுரையை நோக்கிப் படை எடுக்க ஆரம்பித்துவிட்டார்கள். இலங்கையிலிருந்தும் பேராளர்களும் அறிஞர்களும் போகிறார்கள். இந்த மகத்தான மகாநாட்டைப் பார்த்தும் கேட்டும் எழுதுவதற்காக பத்திரிகையாளர்களும் பல நாடுகளிலிருந்தும் அங்குபோகிறார்கள்,

இந்த மகாநாட்டைப் பார்க்கவும் அதுபற்றி எழுதவும் எந்தப் பத்திரிகையாளனுக்குத்தான் ஆசை ஏற்படாது?

★ ★ ★

பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் முடிக்குரிய இளவரசர் சாள்ஸ் பம்பாய்க்கு விஜயம் செய்த பொழுது அங்குள்ள இளம் சினிமா நடிகையொருவர் அவரை எதிர்பாராத விதமாக முத்தமிட்டு பரபரப்பேற்படுத்தினர்.

முத்தமிட்ட கையோடு ''கோபமா!'' என்றும் கேட்டு வைத்தார் அந்த நடிகை.

''கொஞ்சம் கூட இல்லை'' என்று பதிலளித்த இளவரசர் இந்தியப் படங்களில் முத்தம் அனுமதிக்கப்படுகிறதா என்று கேட்டார். ''ஓ! இல்லை, என் முதல் முத்தமே இதுதான்'' என்று பதிலளித்தார் அந்த நடிகை பத்மினி கொல்காப்புரி.

இளவரசர் இவ்வாறு இளம் பெண்களின் முத்த முற்றுகைக்குள்ளானது இது முதல் தடவையல்ல.

ஆஸ்திரேலியாவுக்கு கடந்த முறை சென்றிருந்தபோது கடற்கரைக்குக் குளிக்கச் சென்ற இளவரசரை நீச்சல் உடை அணிந்த பெண் ஒருத்தி பொலிஸ் தடையையும் மீறி துரத்திச் சென்று முத்தமாரி பொழிந்து திக்குமுக்காடச் செய்தார்.

-- பேனா.

## உற்சாகமானவர்கள்!

மாலி

அவைக்காற்றுக் கலைக்கழகம்!

இந்தப் பெயர்கூட, சற்று யோசித்துப் பார்த்தால்தான் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள முடியும்.

மேலெழுந்தபோக்கில் சற்று அது மயக்கந்தான்.

அவைக்கு ஆற்றுகின்ற கலைக்கழகம். ஆங்கில வடிவில் அது சுலபமாகவே புரிகிறது: Performing Arts Society.

இன்று நன்கு அறியப்பட்ட இந்த நாடக நிறுவனத்தின் தயாரிப்புகளிலும் இந்த அம்சங்கள் இருக்கும்.

சற்றுச் சிந்திக்கவைப்பன அவை: சிந்தித்தற்றான் முழுமையாக அவற்றைப் புரிந்து கொள்ளமுடியும்.

நாடகத்தின் தலைப்புக்கள் கூட ஆங்கிலப் பதங்களில் தான் இலகுவாகத் தொனிக்கும் அநேகமாக அவை மொழிபெயர்ப்பு நாடகங்களே.

ஒவ்வொரு பாணியிலே ஒவ்வொருவருக்கு நாட்டம்'

மொழிபெயர்ப்பு நாடகங்களிலும், இத்தகைய அம்சங்களிலும் இவர்களுக்கு நாட்டம்.

ஆனால், யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் இவை நமக்கு இன்று தொடராகக் கிடைக்கின்றன.

பலையகம் மற்றும் பகுதிகளிலும், பாடசாலைகளிலும்கூட இவர்கள் செல்வதை நாம் கேட்கமுடிகிறது.

அண்மைக் காலத்திலே ஒரு பரவலான தாக்கம் இது.

பாலேந்திரா கொழும்பிலே ஒரு சிவில் என்ஜினியர், ஆனந்தராணி யாழ்ப்பாணத்துக் கல்லூரியிலே ஆசிரியை. நிர்மலாவும் அப்படியே.

இவர்களெல்லோரும் ஒன்று சேர்ந்து ஒத்திகை பார்த்து, 'போஸ்டர்கள்' ஒட்டி, ஓஹோ என்று விளம்பரமுஞ் செய்து ஒவ்வொரு நிகழ்ச்சியையும் அளிக்கிறார்கள்.

உண்மையிலேயே குறிப்பிடவேண்டியவர்கள்.

புதிது புதிதானவர்களையும் மேடையிலே கொணர்கிறார்கள் ஓராண்டுக்கு முன்னதாக இவர்களின் 'யுகதர்மம்' 'கோரஸ்' பின்னணியுடனான அந்த நாடகம், கொழும்பு லும்பினி மண்டபத்தில் மேடையேறியது. புதிதான ஒரு யுவதி—கட்டுப்பெத்தை பல்கலைக்கழகத்து ஒரு மாணவி அதிலே ஒரு சிறு பாத்திரமேற்றுப் பாடி நடித்தார்.

பாலேந்திரா அவர் மீது ஒரு 'கண்' வைக்கவேண்டுமென்று தோற்றியது.

அண்மையிலே இவர்களின் 'பிச்சை வேண்டாம்' நாடகம் கொழும்பு கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.

மேடையிலே பிரதான பாத்திரத்தை ஏற்று அந்தச் சாந்திதான் நடிக்கிறாரா? அல்லது ஆனந்தராணியே நடிக்கிறாரா என்பதை இடையிடையே யோசித்து அறியவேண்டியிருந்தது.

நடித்தவர், அந்த யுகதர்மத்துச் சாந்திதான்.

ஆனந்தராணியுடைய பாணியிலேதான் 'பட்டுத்தெறிக்கும்' செழிப்பான வளர்ச்சி, அவரது நடிப்பிலே துல்லியமாகத் தெரிகிறது.

இவர்களுள்ளே நிர்மலா ஒரு 'பல்கலை வல்லுநர்'!

அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றின் அரசியல் விஞ்ஞானத் துறைப் பட்டதாரியான இவர், சிறந்த மொழிபெயர்ப்பாளர்: சிறந்த நடிப்பாற்றல் மிக்கவர்; சிறப்பாகப் பாடக் கூடியவர்; சிறப்பாக வாத்தியங்கள் இசைக்க வல்லவர்.

'ஒரு பாவைவீடு', 'கண்ணாடி வார்ப்புகள்' இவரது நடிப்பாற்றலையும், 'யுகதர்மம்' இவரது பாடல், இசை, ஒலித்தாக்க ஆற்றல்களையும் கோடிட்டுக் காட்டின.

ஆக, இலங்கையின் தமிழ்க் கலைத்துறையில், குறிப்பாக நாடகத்துறையில் இன்று உற்சாகமானவர்களாக இவர்கள் காணப்படுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் குழந்தைகளுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களை விலக்கிக் கொள்ளுங்கள்!

கோகிலா மகேந்திரன்

**பிள்ளையைப் பெற்றுவிட்டால் போதுமா? பேணி வளர்க்க வேண்டும் தெரியுமா?**

இப்போதுதான் நடப்பதற்குப் பழகிக்கொண்டிருக்கிற ஒரு குழந்தை 'விழுந்துவிடுவான்' என்பதற்காக அவன் படிகளில் ஏறி இறங்குவதை முற்றாகத் தடுக்கவேண்டும் என்று யாரும் கூறவில்லை. மெதுவாக விழுந்து எழுப்பி, மேலும் முயன்று அவன் அந்தச் செயலைப் பழகிக்கொள்ள அநுமதிக்கத்தான் வேண்டும். ஆனாலும் ஒரு குழந்தைக்கு வரக்கூடிய . அநாவசியமான ஆபத்துக்களிலிருந்து அதனைக் காப்பாற்றுவது நிச்சயமாகப் பெற்றோருடைய கடமை தான்.

### மாத்திரைகளை விழுங்கல்

வீட்டிலே யாரோ ஒருவர் ஏதோ ஒரு வருத்தத்திற்கென வாங்கி வைத்துக்கொண்ட மாத்திரைகளை அள்ளி விழுங்கி விட்டு, ஆஸ்பத்திரியில் படுத்துக்கொள்ளு குழந்தைகளின் எண்ணிக்கை வரவர அதிகரித்துக்கொண்டுவருகிறது. என்ன காரணம்?

உங்கள் குழந்தை மாத்திரைகள் அடங்கிய ஒரு போத்தலைத் திறந்துவைத்து விளையாடிக்கொண்டிருப்பதை நீங்கள் திடுமென்று தரிசிக்கிறீர்கள் என வைத்துக்கொள்வோம். அந்தப் போத்தலில் எத்தனை மாத்திரைகள் இருந்தன என்பது பற்றியோ, குழந்தை எத்தனை மாத்திரைகளை விழுங்கிவிட்டது என்பது பற்றியோ உங்களுக்கு எதுவுமே தெரிந்திருக்காது. உடனே என்ன செய்வீர்கள்?

விழுந்தடித்து ஓடிக் குழந்தையின் கையில் உள்ள போத்தலைப் பறித்து கொள்வீர்கள். உங்கள் விரலை அதன் தொண்டைக்குள் திணித்து மாத்திரைகள் இருக்கின்றனவா என்று பார்க்க முயற்சிப்பீர்கள். குழந்தை உண்மையில் ஒரு மாத்திரையையும் விழுங்காமல் இருந்தால்கூட , உங்களுடைய பரபரத்த நடவடிக்கைகள் அதனை அச்சமுறச்செய்து அழவைத்துவிடும். அந்த அழுகையைக் கண்டு மேலும் பயந்த நீங்கள் அவசர அவசரமாகக் குழந்தையை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்வீர்கள். அங்கே குழந்தையை எதிர்கொள்கிற மருத்துவருக்கும் உங்கள் நிலைதான். குழந்தை தனது உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய அளவிற்கு மாத்திரைகளை உட்கொண்டுவிட்டதா இல்லையா என்று அவர் சாத்திரம் பார்க்கமுடியாது. அதேசமயம் நேரத்தை வீணடித்துக்கொண்டு குழந்தையை அவதானித்துக் கொண்டிருக்கவும் முடியாது. ஆகவே அவரும் அவசரமாகக் குழந்தை வாந்தி எடுக்கக்கூடிய ஏதாவது மருந்தினைக் கொடுப்பார். அல்லது ஒரு குழாயைச் சொருகி இரைப் பையைக் கழுவுவார், இந்த இரண்டு செயல்களுமே குழந்தைக்கு மிகவும் வேதனை அளிப்பவையாக இருக்கும். இ போது குழந்தை ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டது. இருந்தாலுங்கூட ஒரு நாளைக்குக் குழந்தையை ஆஸ்பத்திரியில் வைத்து அவதானிக்கவே மருத்துவர் விரும்புவார்.

ஆகவே அடுத்த நாள் குழந்தை வீட்டிற்கு வரும்போது ஆஸ்பத்திரியைப் பற்றி நினைவில் நிலையாகப் பதிந்துவிடக்கூடிய ஒரு வெறுப்புணர்வு அதனிடம் தங்கி நிற்கும். ஒரு மாத்திரையைக்கூட விழுங்காத குழந்தைக்கும்—மாத்திரையுடன் விளையாடிய குற்றத்திற்காக—சிலவேளை இத்தனை தண்டனையும் கொடுத்திருப்பீர்கள். உண்மையில் தண்டனை பெறவேண்டியவர்கள் குழந்தையின் பெற்றோரே! குழந்தையல்ல!

### பாதுகாப்பு நடவடிக்கைகள்

நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? வீட்டிலே உள்ள மாத்திரைகள், மருந்துகள், நஞ்சுகள் அனைத்தையும் அலுமாரியில் வைத்துப் பூட்டியிருக்கவேண்டும். அலுமாரியைத் திறக்கக்கூடிய குழந்தைகள் வீட்டில் இருக்குமாயின் அலுமாரித் திறப்பு குழந்தைகளுக்குத் தெரியாத இடத்தில் மறைத்துவைக்கப்பட்டிருக்கவேண்டும். முக்கியமாக நிறமுள்ள மாத்திரைகளைப் பற்றி மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும். கர்ப்பவதியான அல்லது பாலூட்டும் தாய் பாவிக்கின்ற நிறமுள்ள இரும்புச்சத்துமாத்திரைகளைப் போன்றவையும், கூட்டுக் குளிகைகளாகக் காணப்படும் பற்றீரியாக் கொல்லிகளும் குழந்தைக்கு மிகவும் ஆபத்தானவை. நிறமுள்ள மாத்திரைகளைக் குழந்தை பெரும்பாலும் இனிப்பு என்று நினைத்துக் கொள்வதனால் அவைகளை வெளியான இடங்களில் வைப்பது விபத்துக்களைத் தோற்றுவிக்கிறது.

விபரம் அறியாத குழந்தைகளை முன்னால் வைத்துக்கொண்டு நீங்கள் மாத்திரைகளை விழுங்குவதும் நல்லதல்ல. அதனைப் பார்க்கின்ற குழந்தை, நீங்கள் தனக்குத் தராமல் இனிப்புகளைச் சந்தோஷமாகச் சாப்பிடுகிறீர்கள் என நினைத்துக்கொண்டு, நீங்கள் இல்லாத நேரத்தில் அறைக்குள் நுழைந்து அதனைத் 'திருட' எத்தனிக்கும்.

அதேநேரம் குழந்தை சுகயீனமாக இருந்து, அதற்கு மருந்துகளைத் தரவேண்டிய சந்தர்ப்பங்களிலும் 'மாத்திரை'களை 'இனிப்பு' என்று பொய்யாகச் சொல்லி குழந்தையை ஏமாற்ற முயற்சிக்காதீர்கள். அவ்வாறு நீங்கள் கூறும் பட்சத்தில் குழந்தையின் குழப்பம் மேலும் அதிகரிக்கும். மருந்துகளை 'மருந்து' என்றும் இனிப்புகளை 'இனிப்பு' என்றும் நேர்மையுடன் சொல்லுங்கள்.

வீட்டில் உள்ள எந்தவொரு அங்கத்தவரும் குடித்த மாத்திரைகள் அவரது நோய் குணமான பின்பும் எஞ்சியிருக்குமாயின் கவனமாக அவற்றை எடுத்துக் குப்பையில் வீசிவிடுங்கள். அவை மிகவும் விலை உயர்ந்த மாத்திரைகளாயின் உங்கள் மருத்துவரிடம் திருப்பிக் கொடுத்து விடலாம்.

இவ்வாறான பாதுகாப்புகளை நீங்கள் மேற்கொள்ளும் பட்சத்தில் குழந்தை பெரும்பாலும் மாத்திரைகளை உட்கொள்ளாது. இவ்வளவையும் மீறித் தற்செயலாக அது உட்கொண்டு விடுமாயின் ஆஸ்பத்திரிக்குப் போகும்போது அது உட்கொண்ட அல்லது உட்கொண்டதாக நீங்கள் நினைக்கின்ற மாத்திரையின் மாதிரியை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள். மருத்துவருக்கு அது மிகவும் உதவியாயிருக்கும்.

### வேறு பொருட்களை விழுங்கல்

சிறிய காசுகள், ஊசிகள், உடைந்த பொம்மைத் துண்டுகள் போன்றவற்றையும் சில வேளைகளில் விழுங்கி விடுவதுண்டு. இவற்றில் பெரும்பாலானவை பிரச்னை எதையும் கொடுக்காமல் மலத்துடன் வெளியேறிவிடும். இந்த வெளியேற்றத்தைப் பெற்றோர் வீட்டில் வைத்தே அவதானிக்கலாம். மிக அரிதாக அவை உணவுக் கால்வாய்த் தொகுதியை அடைத்துக் கொண்டு அல்லது குத்திக் கொண்டு விடும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் மட்டும் (குழந்தை வேதனைப்படுமாயின், உதவியை நாடலாம்.

பெரிய உணவுத் துண்டுகள் ஏதாவது குழந்தையின் தொண்டையில் சிக்கிக்கொள்ளுமாயின், குழந்தையைத் தலைகீழாகத் தூக்கிக் கொண்டு முதுகில் தட்டினால் உணவு வெளியேறிவிடும், குழந்தை உணவு உட்கொள்ளும் நேரங்களில் எல்லாம் யாராவது ஒரு பெரியவர் அருகில் இருந்து கொண்டால் பெரிய துண்டுகளை அது விழுங்கிக் கஷ்டப்படுவதைத் தடுத்து நிறுத்தி விடலாம்.

குழந்தைகள் தவறுதலாக உட்கொண்டு விடுகின்ற திரவங்களில் மிகவும் முக்கியமானது மண்ணெய் ஆகும். இத்திரவம் இரைப் பையினுள்ளும் நுரையீரலினுள்ளும் சென்று குழந்தைக்கு ''நியூமோனியா' வை உண்டாக்கக் கூடும்.

நெல்லி இரசப் போத்தல் போன்றிருக்கும் நிறமுள்ள போத்தல்களிலும் வேறு பழரசங்கள் காணப்படும் போத்தல்களிலும் மண்ணெய்யை ஊற்றி வைக்காதீர்கள். பழரசம் என்று நினைத்துக் குழந்தை தவறுதலாக மண்ணெய்யை உட்கொள்ள இதுவழி வகுக்கும்.

### வேறு விபத்துக்கள்

சாப்பாட்டு மேசைக்குக் கீழே நின்று மேசை விரிப்பைப் பிடித்திழுத்து மேசைக்கு மேல் உள்ள சூடான உணவுப் பொருட்களைத் தனக்கு மேல் கொட்டிக் கொள்ளுதல் குழந்தை எதிர் நோக்கும் மற்றொரு பொதுவான அபாயமாகும். வீட்டில் பாவிக்கும் சாப்பாட்டு மேசையை விரிப்பற்றதாய் கழுவக்கூடிய பிளாஸ்ரிக் மேற்பரப்புடையதாய் வைத்திருத்தல் இந்த ஆபத்தைத் தவிர்க்கும்.

வீதிகளிலும் வாகன நடமாட்டமுள்ள பிற இடங்களிலும் தன்னைத்தானே பாதுகாத்துக் கொள்ளக் கூடிய பொறுப்புணர்வைக்குழந்தைக்குக் கற்றுத்தர வேண்டும்.

வீட்டுத் தோட்டம், சமையலறை போன்ற இடங்களில் கத்தி, மண்வெட்டி, அலவாங்கு போன்ற பொருட்களைக் கவலையீனமாக விட்டுச் செல்லக்கூடாது. தோட்டத்திலோ அல்லது சமையலறையிலோ குழந்தை ஏதாவது வேலை செய்து பழக விரும்பும் பட்சத்தில் பெரியோரின்

(7ம் பக்கம் பார்க்க)

---

**பா நாடகம்:**

# ஆசைக் கடலின் ஆழச் சுழிகள்

சொக்கன்

## காட்சி (4)

(மாமன் ஏமநாதனின் தனியிடம். சச்சந்தன் அங்கு வருகின்றான்.)

சச்:- வணக்கத்திற்குரியீர்! என்றன் மாமனே! வரச் சொன்னீராம்

ஏம:- சுணக்க நான் விரும்பவில்லை சச்சந்தா! அமர்வாய் சற்றே.

சச்:- (எரிச்சலுடன்) அமர்வதற்கு ஏது நேரம்? அவை கூடிவிடுமே மாமா!

ஏம;- (கேலியாய்ச் சிரித்து) அமர்வதற்கு உகந்த நல்ல அமைதியை இழந்தாய் போலும்.

சச்:- (சற்றுக்கோபத்துடன்) ஆர் சொன்னார்? உபதேசத்தை அப்புறம்வைத்தால் என்ன?

ஏம;- நெருப்பினில்கையைச் சுட்ட பின் எதற்கு உபதேசங்கள்?

சச்:- (வெறுப்புடன்) இப்பொழுது அவ்வாறு ஒன்றும் ஏற்படவில்லை. எந்தத் தப்புமே நிகழவில்லை. தயவுடன் விடையைத்தாரும்.

ஏம:- (பொறுமையாக) சச்சந்தா! அரசபாரம் சலித்ததென்று அதனை யார்க்கோ பிச்சைபோட்டிடவே இன்று பேரவைகூட்டுவாயேல் அச்சமே இல்லாப் பிள்ளையாகிய உனக்குச் சற்றே அச்செயல் விளைவு பற்றி அறிவித்தல் தவறோ? சொல்வாய்.

சச்:- மாமனே துறவை ஏற்று மண், பெண், பொன் பறுறைவிட்டீர். தாம் இங்கில் வீணே உந்தம் தலையினைப் போடல் ஏனோ?

ஏம:- மாமனும் உறவால் அல்ல மன்னரின் மரபென்றல்ல. நாமும் இந்நாட்டில் வாழும் குடிகளில் அடங்குகின்றோம்.

சச்:- 'அடங்குகின்றோம்' என்கின்றீர் அரசனும் என் பணிக்குத் தடங்கலை விளைக்க எண்ணும் தவறினைச் செய்வதேனோ?

ஏம:- (சிரிக்கின்றார்) அடங்கியோர் அடக்க எண்ணும் அந்நிலை வந்ததப்பா!

சச்:- (ஆங்காரமாக) அடக்கவா? எனையா? நீரா?

ஏம:- அது என்றன் கடமையாகும்.

சச்:- கடமையா? அமைச்சன் என்ற கண்ணியப் பதவி உம்மை அண்டந்தது எப்போது மாமா! அதை எனக்கு எடுத்துச்சொல்லும்.

ஏம: (அமைதியாக ஆனால் உறுதியாக) கேவல பெண் பித்தாலே கேட்கொணுக் கேள்விகேட்கும் நாவலிப்புடையோய்! இந்த நல்லுலகு எங்கும் என்றும் பாவைக்காய் உரிமை விட்டுப் பைத்தியம் மிஞ்சி நின்று யாவர்க்கோ அரசை ஈய, யார் உனக்கு உரிமை ஈந்தார்?

சச்:- (மிகுந்த கோபத்துடன்) மன்னவன் எனக்கு மேலாய் வந்திருந்து உரிமை கோர உன்றனக்கு உரிமை தந்த உலுத்தன் யார்? அதனைச் சொல்லு.

ஏம:- சச்சந்தா! விட்டுச் சழக்குகள் பலவும் பேசி உச்சத்தில் பித்துக் கொண்டாய் உனக்கு இது அழிவேயாகும்.

சச்:- அழிவதும் ஆக்கத்தானும் ஆக்கிட என்னால் ஆகும். பழியதும் புகழும் என்றன் பாதத்தில் அடிமை ஆகும் இழிவுகள் பேசல்வேண்டாம் எனக்கு இனி விடையைத்தாராய்'

ஏம: குழந்தையாய்த் திறுவனுக்குக் குறுகுறு நடந்திடு... இழந்தனை மதியைப் பெண்கள் இதழ்க்கடை முறுவலுக்காய்! வளர்ந்தனை, அவர்கள் இச்சை வளர்ந்தது விஷமாய் உன்னில் பிளந்தது நர்ல் இடையாளானன் விசயையால் யாவும் விட்டாய்.

சச்: பேரழகு உருவம் பெற்றுப் பெண்ணென விசயையாகிக் கூரறிவு அனைத்தும் கொள்ளை கொண்டதும் உண்மை. அந்தக் கார்நிறக் கூந்த லாள்என் கருத்தினில் அமர்வும் உண்மை. ஆர்எது சொன்னால் என்ன? அவளுக்காய் எதுவும் செய்வேன்.

ஏம: மன்னர்தம் உரிமைத் தாயம் மறைந்திட வழைபுரிந்தாய என்னதான் காமப் பித்தம் ஏறியபோதும் இந்தச் சின்னதாம் செயலைச் செய்து சிதைக்காதே புகழை மன்னா!

சச்: என்உயிர் நண்பன், என்றன் இனிய நல் லமைச்சன் பற்றிக் கன்றிடும் தீமை சொன்னீர் கருத்தினிற் கொள்ளேன் என்றும் என்னதான் நிழ்ந்த போதும் என்முடிவு அசலேன் மாமா!

ஏம: விதிஇது என்றால் மார்க்கம் வேறில்லை சச்சந்தாநீ பதிஇனச் செய்கை செய்து மாய்வினைக் கொணர்ந்தால் வேறு கதியேது? மக்கள் தம்மைக் கடவுள்தான் காக்க வேண்டும்.

சச்: கடவுளும் விதியும் என்றன் கருத்தினை மாற்ற மாட்டா விடும்இனி நேரம் இல்லை வேறுஎன்ன? வருகின்றேன் நான்.

(இசை)

(தொடரும்)

---

# சக்தி

வான மெலாம் வர்ண ஜாலம்
கான மெலாந் தேவ க்ானம்
தேன முதமூ ட்டுஞ் ஞானம்
வான வரும் வணங்குஞ் சக்தி.

மலைக ளிலும் வண்ண முகில்களிலும்
அலைக ளிலும் வண்ண மீன்களிலும்
சிலைக ளிலும் விண் மீன்களிலும்
கலைக ளிலுஞ் சக்தி மயம்.

நவ கோளும் நன் நிலமும்
தவ பலனுந் தண் ணளியும்
சிவ மயமுஞ் சிந் தனையும்
நவ சக்தி நின் னதன்றோ.

உயி ரும்பிற சடமும் - வினை
பயி ருமசை விலங்கும் - உள்
அய ருங்கரு வாழ்வும் - இவை
உய ர்சக்தி உபயந் தானே.

உலகோ மாறி உருவோ குலைந்து
நிலையோ மாறி நினைவோ கலைந்து
மலையே பாறி மாய்ந்து போயினும்
நிலையே மாறு சக்தி வாழ்க.

— கோபிதாசன்
(ஆவரங்கால்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு விமர்சன நோக்கு: ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த வெளியீடு

# மாணவ மகாநாடுகளின் சூத்திரதாரியாக ஹன்டியே விளங்கினர்!

ச. அம்பிகைபாகன்

நூல்: ஹன்டி பேரின்பநாயகம் - ஞாபகார்த்த வெளியீடு.

ஆசிரியர் குழு: ஏ. எஸ். கனகரத்தினம், என். சபாரத்தினம், சீலன். கதிர்காமர்.

வெளியிட்டோர்: ஹன்டிபேரின்பநாயகம் ஞாபகார்த்தக் குழு.

அச்சிட்டோர்: சுன்னுகம் திருமகள் அச்சகம்.

விலை: ரூ. 30-00 யாழ்ப்பாணத்தில் பிரபல புத்தக நிலையங்களில் கிடைக்கும்.

ஹன்டி பேரின்பநாயகம் ஞாபகார்த்த வெளியீடு, அவர்களின் மாணவர்களாலும் அன்பர்களாலும் வெளியிடப்பட்டிருக்கின்றது. இதில் இரண்டு பகுதிகள் காணப்படுகின்றன. ஒருபகுதி ஹன்டியின் தலைமையில் நிறுவப்பட்ட வாலிபர் மகாநாட்டின் சரித்திரத்தைக்கூறுகின்றது. இதை எழுதியவர் வாலிப மகாநாட்டோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவரான வண. J. W. A. கதிர்காமரின் மகனும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சரித்திர விரிவுரையாளருமான சாந்தசீலன் கதிர்காமராவர், மற்றைய பகுதி ஹன்டி அவர்கள் காலத்துக்குக்காலம் ஆங்கிலப்பத்திகைகளுக்கு எழுதிய கட்டுரைகள், சமர்ப்பித்த மனுக்கள், நிகழ்த்திய உரைகள் முதலியவற்றிலிருந்து தெரியப்பட்ட தொகுப்பாகும்.

## வாலிபர் மகாநாடு

வாலிபர் மகாநாட்டின் தோற்றத்துக்கு ஆசிரியர் இரண்டு முக்கிய காரணங்களைக் குறிப்பிட்டுள்ளார். ஒன்று இந்தியாவில் காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற சுதந்திர இயக்கம் யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்திய விளைவு, மற்றையது யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியர் மாணவர் மத்தியில் ஏற்பட்ட சுதந்திர உணர்ச்சி, யாழ்ப்பாணக் கல்லூரிக்கு முன்னோடியாக விளங்கிய செமினேறியில்கூட யாழ்ப்பாண மக்களின் பாரம்பரியம் புறக்கணிக்கப்படவில்லை. அங்கு ஆங்கிலத்தோடு செந்தமிழும் செவ்வனே போதிக்கப்பட்டது அங்கு கடமை ஆற்றிய கொய்சிங்ரன் போன்ற பாதிரிமார் சைவசித்தாந்த சாத்திரங்களை நன்கு கற்றதோடு அவற்றை ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார்கள்.

மேற்கூறியவை முக்கிய காரணங்களாகக் கூறப்பட்டிருந்த போதிலும் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பரவலாகவும் சிறப்பாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, பரமேஸ்வராக்கல்லூரி போன்ற கல்லூரிகளிலும் தேசிய உணர்ச்சி காணப்பட்டது. இந்தக்காலத்தில் இந்துக்கல்லூரியில் சஞ்சீவரவ், சிவரவ் போன்ற அதிபர்கள்மூலம் ஒருமறுமலர்ச்சி ஏற்பட்டது. இவ்விருவரும் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்தவர்கள். அன்னிபெசன்ற் அம்மையாரின் கண்காணிப்பில் வளர்ந்தவர்கள். பரமேஸ்வராக்கல்லூரியில் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்த கோடீன் பியேஸ் என்னும் அதிபர்மூலம் ஒரு விழிப்பு ஏற்பட்டது. இவற்றிற்கு மேலாக இந்நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் கல்கத்தா சர்வகலாசாலையில் படித்துப் பட்டம்பெற்ற ரி. சரவணமுத்து M. A., M. S C., வி, முத்துக்குமாரு M. A., ஏ. குமாரசுவாமி M. A., வி. நாகலிங்கம் B. A. போன்றவர்கள் இந்துக்கல்லூரியிலும். பரமேஸ்வராக்கல்லூரியிலும் ஆசிரியர்களாக இருந்தனர். இவர்கள் வங்காளப் பிரிவினையால் ஏற்பட்ட மறுமலர்ச்சிக்காலத்தில் கல்கத்தாவில் கல்வி கற்றவர்கள். இதன் விளைவு இவர்களில் நிறையக் காணப்பட்டது. ஹண்டி அவர்களுக்கு முற்பட்ட காலத்தில் சிறந்த இளைஞர் தலைவராக விளங்கியவர் திரு. வி. முத்துக்குமாரு அவர்களே. ஆரம்பகாலத்தில் வாலிபர் மகாநாட்டில் இவர் ஆற்றியசேவையை இந்நூலில் இருந்து அறிந்துகொள்ளலாம்.

இவ் இயக்கம் 1924ம் ஆண்டு தொடக்கம் 1931ம் ஆண்டு வரைக்கும் மாணவர் மகாநாடு என்னும் பெயரில் இயங்கிவந்தது. 1931ம் ஆண்டில் அரசாங்கசபையைப் பகிஷ்கரிக்க தீர்மானித்த பின்பே வாலிபர் மகாநாடு என்ற பெயர் ஏற்பட்டது. நான் மாணவர் மகாநாடு பற்றி 1925ம் ஆண்டளவில் கல்லூரி மாணவனுக இருந்தகாலத்தில் ஒரு மஞ்சள் துண்டுப் பிரசுரம்மூலமாகவே அறிந்தேன். இத்துண்டுப்பிரசுரத்தில மாணவர் மகாநாட்டின் நோக்கங்கள் கூறப்பட்டிருந்தன. அவற்றில் முக்கியமானவை பின்வருமாறு:-

1. சாதி சமயப் பூசல்களை ஒழித்தல்.
2. சுதேச மொழிகள், இலக்கியங்களை வளர்த்தல்.
3. தமிழ் மாணவர் சிங்களத்தையும், சிங்கள மாணவர் தமிழையும் கற்பதற்கு வழிவகுத்தல்.
4. சுதேசப் பொருள்களுக்கு ஆதரவு கொடுத்தல்,
5. சுதேச உடையை உடுத்தல்.

மேற்கூறியவற்றை நோக்கும்பொழுது ஆரம்பத்தில் இது மாணவர் மத்தியில் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதே பிரதான நோக்கமாகக் கொண்டிருந்ததைக் கவனிக்கலாம். ஆனல் தேசிய இயக்கம் வலுவடைந்துவர மாணவர் மகாநாடும் அரசியல் விஷயங்களில் கவனம்செலுத்தத் தொடங்கியது.

## சூத்திரதாரி

இது மாணவர் மகாநாடாக இருந்தபோதும் ஆண்டுக்கூட்டங்களுக்குத் தலைமை வகிக்க ஒரு பெரியாரை அழைப்பது மரபாக இருந்தது. 1924ம் ஆண்டில் நடைபெற்ற ஆண்டு விழாவுக்கு யாழ்ப்பாணக் கல்லூரி உப-அதிபர் ஜே. வி. செல்லையா தலைமை தாங்கினர். காரியதரிசிகளாக எம். பாலசுந்தரமும், (பின்னுள் எம். பி.), எஸ். துரைசிங்கமும் (இப்பொழுது மலேசியாவில் இருப்பவர்) இருந்தனர். வரவேற்புரையை தலையாளி எஸ். சி. சிதம்பரநாதன் நிகழ்த்தினர். யார் உத்தியோகத்தர்களாக இருந்தபோதிலும் பின்னணியில் எப்பொழுதும் ஹன்டியே இருப்பார். அவரே சூத்திரதாரி இரண்டாம் மாநாடு ஆனந்தக் கல்லூரி அதிபர் குலரத்தின தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை எஸ். ஜே. குணசேகரம் (பின்னுள் கல்வியதிகாரி) நிகழ்த்தினர். மூன்றும் மாநாடு டாக்டர் ஐசாக் தம்பையா தலைமையில் நடைபெற்றது.

## காந்தியடிகள் வருகை

1927ம் ஆண்டு மாணவர் மகாநாட்டின் சரித்திரத்தில் ஒரு முக்கிய சம்பவம் நிகழ்ந்தது. அதுதான் காந்தியடிகள் வரவு. காந்தியடிகள் இலங்கைக்கு மாணவர் மகாநாட்டின் அழைப்பிலேயே வந்தார். இவ்வழைப்பை ஹண்டி அவர்கள் காந்தியடிகளுக்கு நேரில் பங்களூரில் சமர்ப்பித்தார். மாணவர் மகாநாடு காந்தியடிகளை அழைத்தபோதிலும் ஒரு பொது வரவேற்புச் சபை அமைக்கப்பட்டது. அதற்கு டபிள்யு. துரைசாமி தலைவராகவும், எம், எஸ். இராசரத்தினமும், ஹண்டி பேரின்பநாயகமும் காரியதரிசிகளாகவும், சட்டத்தரணி குமாரசூரியர் தனுதிகாரியாகவும் நியமிக்கப்பட்டனர். இந்தக் காலம் தொடங்கித்தான் கலைப்புலவர் நவரத்தினமும், அவர்களுடைய நண்பர்களான ஏ. ஈ. தம்பர், து.சீனிவாசகம், கா. வயிரமுத்துவும் நானும் மாணவர் இயக்கத்தில் ஈடுபடத் தொடங்கினேம். இப்படித் தொடர்புகொண்ட [illegible] இயல் விஷயங்களில் நேரடியாக ஈடுபடவில்லை அரசியல் விஷயங்களைத் தமது நண்பர் தம்பருக்கு விட்டுவிட்டு, கலை கலாச்சார விஷயங்களில் ஈடுபட்டுவந்தார். இத்துறைகளில் தமது இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக கலாநிலையத்தைத் தோற்றுவித்தார். இதன் மூலம் கலைப்புலவர் ஆற்றிய தொண்டை மக்கள் நன்கு அறிவர். கலாநிலையத்தை ஹன்டி அவர்கள் வாலிபர் மகாநாட்டின் கலைப் பகுதி (Cultural adjunct) என்று கூறுவர்.

காந்தியடிகள் பல கிராமங்களுக்கும், கல்லூரிகளுக்கும் விஜயஞ்செய்தார். சென்ற இடமெல்லாம் கதர் நிதிக்குப் பண முடிச்சுக்கள் வழங்கப்பட்டன. காந்தியடிகள் முக்கிய இடங்களில் சொற்பொழிவு ஆற்றினர். யாழ்ப்பாணத்தில் காணப்படும் தீண்டாமை, சீதனமுறை, மது அருந்தும் பழக்கம், இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் கல்வித்துறையில் இருந்த பூசல் முதலியன பற்றிக் காந்தியடிகள் யாழ்ப்பாணத்திற்கு வரமுன்பாகப் பலர் அவர்களுக்கு எழுதியிருந்தனர். இக்குறைபாடுகளை நீக்கவேண்டிய அவசியத்தினைத் தமது சொற்பொழிவுகளில் காந்தி அடிகள் குறிப்பிட்டுள்ளனர்; இச்சொற்பொழிவுகள் எல்லாம் காந்தியடிகளின் காரியதரிசியாக இருந்த மகாதேவதேசாய் எழுதிய "காந்தியடிகளுடன் இலங்கையில்" (With Gandhiji in Ceylon) என்னும் நூலில் காணப்படுகின்றன. காந்தியடிகள் இலங்கைக்கு வந்தபொழுது சுவாமி விபுலானந்தர் மாணவர் மகாநாட்டுத் தலைவராக இருந்து அவர்களை வரவேற்கும் பேறு பெற்ருர். காந்தியடிகள் யாழ்ப்பாணத்தில் வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாருவின் 'ஆம்ஸ்ரோங் சிற்லி' காரில் பிரயாணஞ்செய்தார். அதனை ஓட்டியவர் என்ஜினியர் ராஜகோபால் ஆவர். ஓர் இடத்தில் குறிப்பிட்ட நேரத்துக்கு மேல தாமதமேற்பட்டால் அத்தாமதத்தை, காரை விரைவாக ஓட்டிச் சமாளித்துவிடுவார். காந்தியடிகள் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படும் நேரத்தில் ராஜகோபாலைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர், "இனிமேல் கார் மூலம் அற்புதங்களைச் செய்யாதே" (Dont' do wonders with your car in future).



அறிஞர் ஹன்டி பேரின்பநாயகத்தின் மூன்ருவது நினைவுதினம் இம்மாதம் 11ம் திகதியாகும். அதையொட்டி இந்த விமர்சனக் கட்டுரை வெளியிடப்படுகின்றது. —(ஆ-ர்)

## டொனமூர் அறிக்கை

1928ம் ஆண்டில் டொனமூர் அறிக்கை வெளிவந்தது. அவ்வறிக்கை ஒருவகை இரட்டை ஆட்சியைச் சிபார்சுசெய்தது. சுய ஆட்சியை விரும்பிய மாணவர் மகாநாட்டார் இவ்வறிக்கையைக் கண்டனம் செய்தனர். இக்காலத்தில் தமிழர் மத்தியிலும், சிங்களவர் மத்தியிலும் வகுப்புவாதம் வளர்ந்துவந்தது, இதனை மாணவர் மகாநாட்டார் வன்மையாகக் கண்டித்தனர். 1928ம் ஆண்டில் திரு. சத்தியமூர்த்தி மாணவர் மகாநாட்டாரின் விசேஷ விருந்தினராக வந்திருந்தார், அவரும் இந்தியாவின் அனுபவத்தை முன்வைத்து வகுப்புவாதத்தைக் கண்டித்தனர்.

## திரு. வி. க. வருகை

1929ம் ஆண்டில் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் மாணவர் மகாநாட்டிற்குத் தலைமைவகிக்க வந்தனர். அவர் சமூக சீர்திருத்தத்தையும், தமிழ்மொழி வளர்ச்சியையும் வற்புறுத்தினர். இவ்வாண்டில் மகாநாட்டில் சமபோசனம் நடைபெற்றது. இது யாழ்ப்பாணத்தில் ஒரு கிளர்ச்சியை ஏற்படுத்தியது. இதன் விளைவ அடுத்தடுத்த வருஷங்களிலும் காணக்கூடியதாக இருநதது. 1930ம் ஆண்டில் சைவப்பெரியார் சிவபாதசுந்தரனுர் தலைமையில் திருநெல்வேலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் மகாநாடு நடைபெற்ற பொழுது சமாசனம், சமபோசனம் நடக்கப்போவதாக வதந்தி பரவிக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது. மகாநாடு ஆரம்பித்ததும் மண்டபத்துக்குக் கல்வீச்சு நடைபெற்றது. இதனுல் மகாநாட்டை முற்ற வெளியில் நடாத்திமுடித்தனர். கல்லெறி விழுந்த பொழுது மண்டபத்தில் இருந்தவர்களுள் யானும் ஒருவன்.

1931ம் ஆண்டு வாலிபர் மகர்நாட்டின் சரித்திரத்தின் முக்கிய காலமாகும். அந்த ஆண்டு வரைக்கும் வாலிபர் மகாநாடு ஆரோகண நிலையில் இருந்தது. ஒவ்வோர் ஆண்டும் அதன் செல்வாக்கும்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூவர் எழுதும் குறுநாவல்

# பூ நாகம்!

### (10)

சரசம்மாவின் மகள் பாக்கியத்தை தனக்கு கலியாணம் செய்து தருவதற்குத் தகப்பனார் முயல்கிறார் என்ற செய்தி குமாரின் காதில் சுந்தரத்தாரால் போடப்பட்ட பொழுது ஒரு வியப்பு ஏற்பட்டது முதலில்.

இந்த ஊரில் சிங்கப்பூர்ச் சொத்தாளரான சோமையரின் ஏகப்பட்ட சொத்துக்களுக்கு வாரிசான தனக்குப் பெண் கொடுக்க எத்தனையோ பேர் காத்திருப்பார்கள் என்று அவனுக்குத் தெரியும். பெண்ணை மட்டுமல்லாமல் பொன்னையும் மண்ணையும் சேர்த்து சீதனம் என்ற பேரில் அவர்கள் தரத் தயார் என்றும் அவன் தெரிந்து கொண்டிருந்தான்.

சோமையரின் பெரும் சொத்துக்களின் ஒரே வாரிசு என்ற காரணத்தினாலே படிப்பையும் கோட்டை விட்டுவிட்டு ஊர் முழுவதும் காவாலியாகச் சுத்திக்கொண்டு திரிகிறான்குமார். ஆனால், அதனால் அவன் நல்ல சீதனத்துடன் ஒரு பெண்ணை மணம் செய்து கொள்ளக் கூடாதா? அவனுக்குத் தான் ஏராளம் சொத்துக்கள் இருக்கிறதே! பணம் என்னதான் செய்யாது.

இப்படி ஒரு நிலைமை இருந்தும சோமையர் போயும் போயும் இந்த ஏழைப்பாக்கியத்தைக் கட்டி வைப்பதற்கு முற்படுவதற்கு என்ன காரணம்? இதுதான் அவனுக்கு வியப்பை ஏற்படுத்தியது. அதே நேரம் நாகரிகக் குமரி ஒருத்தியை சொத்து சுகங்களுடன் திருமணம் செய்யலாம் என்ற தனது கனவு இதனால் பாழ்படும் என்ற எண்ணம் எழுந்ததும் வியப்பு வெறுப்பாகியது.

இந்தக் கலியாணத்தின் பின்னணியில் உள்ள நாடகங்களை சுந்தரத்தார் குமாருக்கு எடுத்துக்கூறியதும் தான் குமாருக்கு விஷயம் புரிந்தது. ஊரில் இப்படி எல்லாம் கூட நாடகங்கள் நடக்கின்றன என்பதைத் தான் இதுவரை தெரிந்து கொள்ளவில்லையென்று வெட்கப்பட்டான்.

தன்னுடைய கனவுகளைத் தகப்பனின் திட்டம் தவிடு பொடியாக்கி விடப் போகிறதென்று வெறுப்போடு பயத்தோடு சிந்தித்த குமாருக்கு சிங்கன் - பாக்கியம் காதல் விவகாரத்தையும் அதில் தன் தந்தை சோமையர் வில்லனாக நிற்பதையும் கேட்டதும் கோபமும் ஆக்ரோஷமும் எழுந்தது.

ஏற்கனவே ஒருவனால் காதலிக்கப்பட்ட, அவளைக் காதலித்த ஒரு பெண்ணைத் தனக்குத் திருமணம் செய்யத் தனது தந்தையே முன்வருகிறார் என்பது அவனை உலுக்கிவிட்டது. அதுவும் பண வருவாய் குடும்ப கௌரவம் என்று சொல்லி ஏனைய தந்தைமார்கள் எண்ணுவதைப் போல அல்லாமல்-கேவலம் செம்பாட்டான் ஒருத்தன் தனது உறவுக்காரரிடம் பெண் எடுத்துவிடக் கூடாது என்ற அந்தஸ்துத் திமிரும் அதனால் அவன் மீது ஏற்பட்ட வெறுப்பைப் பழி

## மீண்டும் தொடர்கிறார்

## கோப்பாய் எஸ். சிவம்

தீர்த்துக் கொள்ளும் அநாகரிகமான வெறித்தனமும் தான் உந்திய கீழ்த்தரமான உணர்வுககாகத்தான் இந்தச் செயலில் இறங்கினார் சோமையர் என்ற விஷயத்தை அவனால் ஜீரணிக்க முடியவில்லை.

சுந்தரத்தார் போய் நீண்ட நேரத்திக்குப் பின்னரும் குமார் இந்த விஷயத்தை அசை போட்டுக் கொண்டிருந்தான். சிங்கனைப் பற்றி அவனுக்கு நல்ல அபிப்பிராயம் உண்டு. தானும் தன்பாடுமாக ஒரு கரைச்சலுக்கும் போகாமல இருக்கும் அந்த அப்பாவி மீது சோமையருக்கு என்ன கோபம் என்று அவன் வியந்தான்.

வெறுப்பு, வியப்பு, கோபம், துடிப்பு என்ற அந்த விதமான உணர்ச்சிக் கலவைகள் குழம்பி வெடித்துக் குமுறிய பின் மெல்ல மெல்ல அடங்கிய போது அவனுடைய உள்ளத்தில் மனோதத்துவ ரீதியாக ஒரு படை மாற்றம் ஏற்பட்டிருந்தது.

சோமையர் தனக்கு மட்டும் எதிரியல்ல! சிங்கனுக்கு மட்டும் எதிரியல்ல. இந்த மனித சமுதாயத்துக்கே எதிரான சமூக விரோதி அவர் என்று அவன் சிந்தித்தான். தான் வெகுண்டு எழுந்து அவரோடு பொருதுவதை விட நிதானமாக செயற்பட்டு அவருடைய திட்டத்தை முதலில் தவிடுபொடியாக்குவதேசெய்ய வேண்டியது என்று தீர்மானித்தான். சைக்கிளை எடுத்துக் கொண்டு சிங்கனைத் தேடிப் புறப்பட்டான்.

சிங்கன் குமாரைக் கண்டதும் திகைத்தான். சுந்தரத்தார் குமாரிடம் தனது விஷயம் எல்லாம் சொல்லியிருப்பார் என்று அவனுக்குத் தெரியும். ஆனால் அது குமாரிடத்தில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்தியிருக்கும் என்பதை அவனால் ஊகித்துக் கொள்ள முடியவில்லை.

குமார் சோமையரின் மகன். அவரது குணங்கள் அவனிடம் இருப்பது அதிசயமில்லை. அதே நேரம் அவன் முரடன். காவாலி என்று பேரெடுத்தவன். அப்படிப்பட்டவன் தனக்கெதிராகக் கிளம்பக் கூடும் என்றும் சிங்கன் நினைத்தான். உண்மையில் பாக்கியத்தைத் திருமணம் செய்ய விரும்பாவிட்டாலும் கூட 'ஒரு செம்பாட்டானுக்கு எதிராக செயல்பட வேண்டுமென்ற பழிதீர்க்கும் எண்ணத்தில் தன்னை எதிர்க்கக்கூடும்' என்றவன் பயந்தான்.

தன்னை நோக்கி வருகின்ற குமாரின் முகத்தை நிமிர்ந்து நோக்கி அதன் மூலம் அவன் உள்ளத்தைப் படித்து அறிய முயன்று தோற்று நின்ற சிங்கனின் தோளில் தன் கரத்தைப் பதித்தான் குமார்:

"சிங்கன்! நான் ஒரு காவாலி? ஆனால் உன்னுடைய காதலுக்கு எதிராக நான் நிற்க மாட்டன். சுந்தரமண்ணை எல்லாம் சொன்னவர்"

என்று சொல்லிவிட்டு நிறுத்திய குமார் சிங்கனின் விழிகளை ஊடறுத்து நோக்கினான். மௌனம் ஒரு கணம் நிலவியது. சிங்கன் குமாரைக் கண்டவுடன் எழுந்து நின்றிருந்தான். இப்போது அந்தக் கற்பாறையில் தானும் அமர்ந்து கொண்டு தனக்கருகில் சிங்கனையும் அமரச் செய்தான் குமார்.

"நான் கடைசி வரைக்கும் இந்தக் கலியாணத்துக்குச் சம்மதிக்க மாட்டன் சிங்கன்! நீ பயப்பிடாதை. ஆனால் இப்ப நீஎன்ன செய்யிறதெண்டு யோசிச்சுக்கொண்டு இருக்கிறாய்?"

எதிர்பாராத குமாரின் வருகையும், திடீரென்று எழுந்த அவனுடைய அந்தக் கேள்வியும் அவனைத் திகைப்பூட்டியிருந்தால் அவன் ஒரு கணம் சமாளித்துக் கொள்ள முடியாமல் குமாரையே பார்த்தபடி இருந்தான்.

'இந்தக் குமாருக்குள் இப்படி ஓர் உள்ளமா?' என்று அவன் வியந்தான். அதே நேரம் ஒரு காவாலியின் கடின சித்தத்தைக் கூடக் கனியவைக்கும் சக்தி காதல் என்ற புனிதமான உணர்வுக்கு இருப்பதையும் எண்ணி அதிசயித்தான். மெல்லத் தயக்கத்துடன் சொன்னான்.

"எனக்கெண்டால் ஒண்டுமாய்த் தெரியேல்லை" ஏதோ என்னையும் அறியாமல் இப்படி ஒருஆசையை வளர்த்திட்டன்; ஆனால் இவ்வளவு பெரிய மனிசரின்ரை எதிர்ப்புகள் எல்லாம் வரும் எண்டு நான் நினைக்கேல்லை.

"வேணுமெண்டாச் சொல்லு! இப்பவே நீ பாக்கியத்தைக் கூட்டிக் கொண்டாறதுக்கு வேண்டிய 'சப்போட்' பண்ணிறன்."

கூட்டிக் கொண்டு ஓடிவருதல் என்பது சிங்கனுக்கு அருவருப்பான ஒன்றாக இருந்தது. எப்படியாவது போராடி நேர்மையாக அதைச் செய்யவேணுமெண்டு ஆசைப்பட்டான். அவனுடைய அந்தக் கருத்தைப் பூரணமாகப் புரிந்து கொண்ட குமார் அதை வரவேற்றான். கடைசியில் சொன்னான்.

"சிங்கன் ஒண்டுக்கும் யோசியாதை. நான் இண்டைக்கே பாக்கியம் வீட்டை போறன். சோதியைத்தவிர மற்ற எல்லாரையும் சம்மதிக்கப்பண்ண என்னாலை முடியும். என்னாலை இயன்றவரை நான் இதைச் செய்வன்".

மெல்ல எழுந்து நின்று "ஒண்டு நிச்சயம். நீ மனசாலை தொட்ட அந்தப் பிள்ளையை நான் கடைசி வரையும் தொடமாட்டன்" என்று உறுதி கூறிக்கொண்டு இரண்டு அடி எடுத்து வைத்தவன் மறுபடி திரும்பி நின்று.

"அதுமட்டுமில்லை. வேறை ஒருத்தன் அவளின்ரை மேலை கை வைக்கிறதும் நான் இருக்கிறவரைக்கும் நடக்காது" என்று ஒரு சபதம் பேசுவதுபோலக் கூறிவிட்டு சைக்கிளில் ஏறினான்.

தேவதூதன் வந்து வரம் கொடுத்து விட்டுப் போகிறானே என்று வியந்தபடி நின்ற சிங்கன் அங்குமிங்கும் சிதறிப் போய் நின்று மேய்ந்து கொண்டிருந்த மாடுகளை ஒன்று சேர்த்து விரட்டத் தொடங்கினான். அவனது எண்ணங்களின் சிதறலை மட்டும் அவனால் ஒன்று சேர்க்க முடியவில்லை.

இனி என்ன நடக்கப்போகிறதோ என்ற பயம் இன்னமும் அவனை ஆட்டிக் கொண்டிருந்தது.

### (11)

அந்தி சரிந்து சிறிது நேரம் ஆகியிருந்தது. அவசரம் அவசரமாகச் சோதி நடந்து கொண்டிருந்தான். சோமையரின் வீட்டுப் படலையில் வந்து கூப்பிட்ட போது அவர் தமது மாலை நேரத்துத் 'தாகசாந்தியை' ஆரம்பித்துக் கொண்டிருந்தார், சோமையர் வீட்டில் 'போத்தில்' எப்போதும் 'ஸ்ரொக்' இருக்கும். மாலை நேரத்தில் 'சாடையாகக்' கொஞ்சம் 'பாவித்து' விட்டு நல்லாச் சாப்பிட்டு விட்டுப் படுத்து விடுவார்.

சில நேரங்களில் சற்று அதிகமாகிவிட்டால் வெளியில் புறப்பட்டு வந்து 'குடிகாரப்' பட்டப் பெறுவதும் உண்டு. இன்றும் வழக்கம் போலப் போத்தலை எடுத்து கிளாசில் வார்க்கும் போதுதான் சோதியும் அங்கு வந்து சேர்ந்தான்.

"வாசோதி நல்ல நேரம்" என்றுவரவேற்றார்சோமையர். நல்ல பொருத்தமான தருணத்திலை தான் வந்திருக்கிறோம்; இன்று அலுவலை முடித்து விடலாம் என்ற எண்ணத்துடன் உள்ளே வந்து அமர்ந்தான் சோதி.

மெல்ல மெல்ல மருந்து உள்ளே இறங்கியது. கீழ்த்தரமான மிருக உணர்வுகளும் அசிங்கமான வார்த்தைப் பிரயோகங்களும் மெல்ல மெல்ல மேலே எழுந்தன. தருணம் பார்த்துச் சோதி விஷயத்தை ஆரம்பித்தான்.

"எங்கடை சம்பந்த விஷயமெல்லாம் தவிடுபொடி தான் டாருங்கள்".

"ஏன் ஏன்?" பதறினார் சோமையர்.

"சிங்கன் முந்திவிட்டான்' நிதானமாகச் சோதி சொன்னான்.

"ஏன் பெட்டையைக் கிளப்பிக் கொண்டு ஓடிட்டானே" இருந்த இடத்தை விட்டே எழுந்து விட்டார் சோமர்.

"இல்லை அவன், குமாரைச் சந்திச்சு விஷயத்தை ஒரு மாதிரிச் சரிக்கட்டிப் போட்டான்.

"என்ரை மோன் என்ன குழந்தைப் பிள்ளையே, அவன் சொன்ன உடனே ஓமெண்டுறதுக்கு...."

"அதென்னவோ தெரியாது. அவன் குமாரைப் பிடிச்சு என்னென்னவோ சொல்லி ஏமாத்திட்டான். அதுக்குப் பிறகு குமார் எங்கடை வீட்டை வந்து தம்பிமாரையும் அம்மாவையும் கண்டு ஏதேதோ கதைச்சிருக்கிறன். இந்த ஏமாளியளும் ஏமாந்து போச்சுதுகள். இப்ப

(9-ம் பக்கம் பார்க்க)

[அரசாங்க பொது சேவைத் தொழிலாளர் சங்க யாழ் கிளைத் தலைவர் அமரர் க. செல்லத்துரை சில தினங்களுக்கு முன் மரணமானதையொட்டி இக்கவிதை எழுதப்பட்டது. இவர் 20 வருடங்கள் இச்சங்கத்தின் தலைவராக இருந்துள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது]

## நினைவு கூருவோம்

தொழிலாள வர்க்கத்தின் தோழராகி
தொல்லைபல பட்டுமே தொண்டு செய்தீர்!
வழிகாட்டி உன்னைத்தான் வானோர் கொண்டார்
வாடுகின்றார் உம்முடைய வர்க்க நண்பர்!
விழியிரண்டு குழமாகி விம்மு கின்றார்
வீரனும்மை இழந்ததனால் வீழ்ச்சியுற்றார்!
அழியாதுன் புகழென்றும் அகிலம் தன்னில்
அனைவரும்தான் பிரிவதனால் அழுகின்றாரே!

வறுமையால் யாரேனும் வருந்தல் கண்டு
வகைபலது சொல்லியே வாழ வைப்பீர்!
பெறுகின்ற சம்பளத்தை பெரிதும் மதியாய்!
பெரியவர்கள் சிறியவர்கள் பேதம் பாராய்!
மறுத்துத்தான் சொல்லுகின்ற மனமு மில்லை
மக்களது தலைவனே! மறைந்த தெங்கோ?
உறுதுணையாய் இருந்ததோர் உன்னை யமன்தான்
உயிர்குடித்தான் துயரானோம் உமது தோழர்!

கண்மீதில் உறக்கமின்றி கடமை பார்த்தீர்!
கடைசியிலே உன்னைத்தான் காலன்கொண்டான்!
மண்மீதில் உம்முடைய மகிமை தன்னை
மக்கள்தான் என்றென்றும் மறக்க மாட்டார்!
வெண்ணிறத்தில் உடையைத்தான் விரும்பிப்
போட்டீர்
வேலைக்கு வருவதிலும் வேகம் உண்டு!
எண்ணியெண்ணி பார்க்கின்றோம் ஏக்கம்
கொண்டோம்
எப்படித்தான் மறப்போமோ ஏந்தல் உன்னை!

— கவிஞர் பாஷையூர் தேவதாசன்

## புதிய பாதை

'புதிய பாதை' என்ற ஏட்டின் ஆவணி இதழ் வரப்பெற்றோம்.

'தமிழீழமே வேண்டும்' என முழக்கமிடும் இவ்வேடு பிரதேச அபிவிருத்திச் சபையைக் கண்டிப்பதுடன் 77-ல் கலவரத்தின் போது குடிபெயர்ந்து வந்து வவுனியாப் பகுதியில் குடியமர்ந்துள்ள மலையக மக்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் பற்றியும் விரிவாக செய்தி வெளியிட்டுள்ளது.

இதன் ஆசிரியர் மா. குணரத்தினம் என அறிவிக்கப்பட்டுள்ளது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சுதந்திர வீரர் வரிசை:

# தொண்டு செய்யவென்றே பிறந்த திரு வி. க.

''எனக்குப் பிறப்பு வேண்டும், அப்பிறப்பு பயன் கருதாத்தொண்டுக்குப் பயன்படுதல் வேண்டும்'',
— திரு வி. க

இருபதாம் நூற்றுண்டின் முற்பகுதியில் தேசிய விடுதலைக்குப் போராடியவர்கள் பலர். அவர்களுள் ஒருவராய் இலங்குகின்றார், திருவாரூர் விருத்தாசல முதலியார் மகன் கலியாண சுந்தரனார்.

திரு வி. க. என்ற நான்கு எழுத்தினுள் ஒரு உலகமே அடங்கியுள்ளது அவ்வுலகத்தில் தமிழாசிரியர்; பத்திரிகையாளர்; விடுதலை வீரர்; சமய ஞானி! தொழிலாளர் தலைவர் எனப் பல்வேறு அறிஞர்கள் நடமாடுகின்றனர். திரு. வி. க. அவர்கள் 26-8-1883-ல் பிறந்தார்.

சென்னைக்கு அருகிலுள்ள பூந்தமல்லியை அடுத்த துள்ளம் என்ற ஊரில் பிறந்த திரு. வி. க. சோழிய வேளாளர் மரபைச் சேர்ந்தவர். இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியில் மெட்ரிக்குலேசன் வரை பயின்றார். அப்போழுது யாழ்ப்பாணம் மேலைப்புலோலி நா. கதிரவேற்பிள்ள அவர்கள் தொடர்பால் நடந்த வழக்கொன்றின் காரணமாக மெட்ரிக்குலேஷன் தேர்வு எழுதவில்லை. பள்ளிப்படிப்பு வெம்பி வீழ்ந்தது.

தமக்குக் கல்விக் கண்ணைத் திறந்த தமிழாசிரியர் கதிரைவேற்பிள்ளை அவர்கள் தொடர்பால் தமிழ் மீது ஆழ்ந்த பற்றுக்கொண்டார். சமய நூல்களையெல்லாம் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் திரு, வி. கவுக்கு ஏற்பட்டது. அவ்வார்வத்தை மயிலை தணிகாசல முதலியார் போன்றோர் வாயிலாகத் தீர்த்துக் கொண்டார்.

பின்னர் ஸ்பென்சர் கம்பனியில் கணக்கர் வேலை செய்து வந்தார். அப்போது விடுதலைப் போராட்டம் வீறு கொழுந்தது. லாலா லஜபதிராயின் நாடு கடத்தலும், வங்காளப் பிரிவினையை ஒட்டி எழுந்த சுதேசி இயக்கமும், விபின் சந்திரபாலரின் ஊசன்னைப் பேச்சும், இங்கிலாந்து பார்லிமெண்ட் உறுப்பினரான கீர்ஹார்டி ஸ்பென்சர் வருகையும் அவரது வரலாறும் திரு. வி. க, உள்ளத்தில் புதைந்து கிடந்த விடுதலை உணர்ச்சியையும் நாட்டுப்பற்றையும் வீறிட்டு எழச்செய்தன. அன்று முதல் அரவிந்தகோஷால் நடத்தப்பெற்ற ''வந்தே மாதர'' என்ற பத்திரிகையின் வாசகரானார். தாம் அறிந்துகொண்ட பத்திரிகைச் செய்திகளைக் கம்பனியில் வேலை செய்த தொழிலாளர்களுக்கு எடுத்துரைத்து அவர்களையும் விடுதலை உணர்ச்சி கொள்ளச் செய்தார். இதனால் விரைவிலேயே அவ்வேலை பறிபோனதில் ஆச்சரியமில்லை.

நண்பர் ஒருவரின் முயற்சியினால் வெஸ்லியன் மிஷன் பள்ளியில் அவருக்குத் தமிழாசிரியர் வேலை கிடைத்தது. அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் ஜான்ரத்தினம் பிள்ளையின் தொடர்பால் கிறிஸ்தவ சமயம் பற்றித்தெரிந்து கொண்டார். இடையே சச்சிதானந்தம்பிள்ளை போன்றோர் முயற்சியினால் தாம்படித்த வெஸ்லி கல்லூரியின் தலைமைத் தமிழாசிரியரானார். அவரால் அப்பள்ளியில் பணியாற்றிய பண்டிதர்களின் சம்பளம் உயர்த்தப்பட்டது. மேலும் சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன.

**வி. ரவிச்சந்திரன்**

நாட்டின் நிலைமையைக் கவனித்து வந்த திரு வி. கவுக்கு அரசியலில் நாட்டு விடுதலைக்காகத் தொண்டாற்ற வேண்டும் என்ற வேட்கை எழுந்தது. அதனால் தலைமைத் தமிழாசிரியர் வேலையை விடுத்து 7-12-1917-ல் தேசபக்தர் என்னும் நாளிதழுக் ஆசிரியரானார்.

''தேசபக்தன்'' ஆசிரியராக 2 1/2 ஆண்டு காலம் திகழ்ந்தார். அக்குறுகிய காலத்தில் தமிழுக்கும் நாட்டுக்கும் சுதந்திரப் போராட்டத்திற்கும் சிறந்த முறையில் தொண்டாற்றினர். பின்னர் நவசக்தி என்னும் இதழுக்கு ஆசிரியராகச் சுமார் 20 ஆண்டு காலம் விளங்கினார். இக்காலங்களில் காங்கிரசில் இருந்து சிறந்த முறையில் பணிபுரிந்தார். தொழிலாளர்களுக் கன இந்தியாவிலேயே முதன் முதலில் சென்னைத் தொழிலாளர் சங்கத்தை 24-4-1918-ல் தோற்றுவித்தார். அன்று முதல் சுமார் 30 ஆண்டுகாலம் தொழிலாளர்களுக்கெனப் போராடினார்.

31வது தமிழ்நாடு காங்கிரஸ் மாநாட்டின் தலைவராகக் காஞ்சியில் நியமிக்கப்பட்டார். தலைவராக மட்டுமின்றி அவ்வப்போது நடக்கும் ஒத்துழையாமை இயக்கம், உப்புச் சத்தியாக்கிரகம் முதலிய பல நிகழ்ச்சிகளிலும், சட்டசபைத் தேர்தலிலும் பெரும் தொண்டாற்றினார். இதில் ஒரு வியப்பு என்னவென்றால் பலரையும் சிறையில் அடைத்த ஆங்கில அரசு, இவரை மட்டும் கைதுசெய்யவே இல்லை. 1921ம் ஆண்டு இவரை நாடு கடத்த முயன்ற வெலிங்டன் பிரபுவும் அம்முயற்சியைக் கைவிட்டார்.

ஆங்காங்கே தொழிற்சங்கங்களை அமைத்தார். சமய மாநாடுகளில் தலைமைவகித்துச் சமயங்களின் சீரிய கொள்கையைச் செவ்வனே விளக்கிச் சமயத்தின் உள்ளக்கிடக்கையை மக்களுக்கு அறிவுறுத்தி வந்தார். இவர் தலைமைதாங்கிய தொழிற்சங்கங்களும், சமய மேடைகளும் பலப்பல. இலங்கைக்கு இருமுறை சென்று, மாணக்கர் மாநாடுகளில் தலைமைவகித்தார். இங்ஙனம் தமிழ்நாட்டில் மட்டுமன்றி இலங்கையிலும் அவரது தொண்டு பயன்பட்டது!

சமயம் மட்டுமின்றி, பெண்கள் நலனுக்காகவும் உழைத்தார். கலப்புத் திருமணம் பல நடத்திவைத்தார். இருளில் மூழ்கிக்கிடந்த பெண்களை ஒளி பெறச்செய்தார். விதவைகளுக்கு மறுமணம் செய்து வைத்தார். பெண்கள் நாட்டின் உயிர்நாடி என்பதனை உணர்ந்த திரு. வி. க., பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை என்னும் அரிய நூல் எழுதிப் பெண்ணின் பெருமையை ஆண்கள் அனைவரும் உணரச்செய்தார்.

அரசியலில் காந்தியடிகளின் கருத்துக்களைப் பின்பற்றிக் காந்தீயம் எப்படி மனித வாழ்க்கைக்குத் துணையாக வல்லது என்பதை மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் என்னும் அரிய நூலில் 1927ம் ஆண்டிலேயே எழுதினார்.

எழுபது ஆண்டுகாலம் உயிர் வாழ்ந்த திரு. வி! க,, ஐம்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார் இவர் நடத்திய தேசபக்தன், நவசக்தி ஆகிய பத்திரிகைகள் அக்கால அரசியல், சமூக நிலைகளைச் செவ்வனே விளக்கும் கருவூலமாக விளக்குகின்றன இவர் காங்கிரஸில் தொண்டாற்றிய போது காங்கிரஸ் மாநாடுகள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே நடந்தன. அதைக் கண்ட இவர், மாநாடுகள் யாவும் தாய்மொழியிலேயே நடைபெறவேண்டும் என வலியுறுத்தினார்.

இங்ஙனம் பல துறைகளிலும் நுழைந்து அவற்றையெல்லாம் ஒளிபெறச்செய்த திரு. வி. க, தமது 70வது வயதில் 17-9-1953 அன்று இயற்கையோடு இரண்டறக் கலந்தார்.

எளிய குடும்பத்தில் பிறந்து, இளமையிலேயே மனைவியையும், மக்களையும் இழந்து தம் தமையனார் திரு. வி. உலகநாதர் குடும்பத்தோடு ஒன்றி என் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் கொள்கையின் படி வாழ்ந்து, இன்று தமிழ் நாட்டு மக்கள் உள்ளத்தில் தமிழ் மறுமலர்ச்சிக்குத் தந்தையாக இடம்பெற்றுத் திகழ்கின்றார் திரு வி. க.

---

## மாணவ மகாநாடுகளின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

புகழும் வளர்ந்துவந்தன. அந்த ஆண்டிலேயே டொனமூர் அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்து தேர்தலும் நடைபெற்றது. டொனமூர்த் திட்டத்தை வாலிபர் மகாநாடு எதிர்த்துவந்ததை நாம் முன்பு கவனித்தோம். ஆனால் தேர்தலைப் பகிஷ்கரிப்பது என்னும் பிரேரணை, அவ்வாண்டு கமலாதேவியின் தலைமையில் நடைபெற்ற ஆண்டு விழாவில் எதிர்பாராத முறையில் கொண்டுவரப்பட்ட ஒன்றாகும். இதற்கு இந்திய அரசியல் கொந்தளிப்பும், கமலாதேவியின் பேச்சும் சாதகமாக இருந்தன. அவ்வாண்டுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் சம்பந்தமான பிரேரணை, சுயாரச்சியத்துக்காக மக்கள் தியாகம்செய்யத் தயாராக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டதேயொழிய அரசாங்க சபைப் பகிஷ்காரம் பற்றி ஒன்றும் கூறவில்லை. அரசாங்க சபையைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்பது மேற்கூறிய பிரேரணைக்குத் திருத்தப் பிரேரணையாகக் கொண்டுவரப்பட்டது. திரு. ரி என். சுப்பையா அதனைப் பிரேரித்தார். ஹண்டி அவர்கள் ஆதரித்தார். இத்திருத்தப் பிரேரணை எதிர்ப்பின்றிச் சபையோரால் அங்கீகரிக்கப்பட்டது. இதற்கு மாறான அபிப்பிராயமுள்ளவர்கள் சபையில் இல்லாமல் இல்லை. அங்கிருந்த சூழ்நிலையில் எதிர்ப்பதென்பது முடியாத காரணமாயிற்று.

கமலாதேவியின் இடத்தில் ஜவஹர்லால் நேரு இருந்திருந்தால் பகிஷ்கரிப்புப் பிரேரணை நிறைவேற்றப்பட்டிருக்காதெனக் கூறலாம் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து யாழ்ப்பாணம் வந்திருந்த நேரு, பகிஷ்கரிப்பைப் பற்றி ஆர்வம் கொண்டிருக்கவில்லை என இந்நூலாசிரியர் கூறியுள்ளார். நேரு பகிஷ்கரிப்புப் பற்றிய தமது கருத்தை, அவரை வரவேற்க அமைக்கப்பட்ட குழு அவரைச் சேர் துரைசுவாமி வீட்டில் சந்தித்தபொழுது கூறினர். பகிஷ்கரிப்புப் போன்ற பாரதூரமான செயலை ஒரு சிறுபகுதியினர், அதுவும் சிறுபான்மை வகுப்பைச் சேர்ந்தவர்கள் செய்திருக்கப்படாதென்பதே அவர் அங்கு கூறியதன் சாரம்.

### பகிஷ்கரிப்பு

வாலிபர் மகாநாட்டார் அரசாங்கசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கவேண்டுமென்றுதீர்மானம் செய்திருக்கலாம். பிரசாரம் செய்திருக்கலாம். தீவிரமான செயல்களில் ஈடுபடுவது வாலிபரின் இயற்கையாகும். அவர்களின் உரிமையுமென்று கூறலாம். ஆனால் முதியவர்களும், அரசியல் துறையில் அதிக அனுபவம் படைத்தவர்களுமான சேர் துரைசுவாமி, பாலசிங்கம் போன்றவர்கள் இதற்கு எப்படி உடன்பட்டார்கள் என்பது விளங்கவில்லை. தீர்க்கதரிசனமில்லாமல் அவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டார்கள் என்றே கூற வேண்டும். பகிஷ்கரிப்புக்குப் பின் வாலிபர் மகாநாட்டின் நிலை அவரோகண நிலையாக மாறியது. தேர்தல் நடைபெறாத இடங்களுக்குப் புதிய தேர்தல் திகதியை வைப்பதை வாலிபர் மகாநாட்டார் எதிர்த்தனர். புதிய தேர்தல் நடைபெற வேண்டுமென்று கிளர்ச்சி செய்த திரு. ஜி ஜி பொன்னம்பலத்துக்கும் வாலிபர் மகாநாட்டாருக்கும் மோதல் ஏற்பட்டது. இது காலம்போகப் போக வளர்ந்து கொண்டே வந்தது. திரு பொன்னம்பலத்தின் ஐம்பதுக்கு ஐம்பதையும் தமிழரசுக்கட்சியின் சமஷ்டிக் கொள்கையையும் வாலிப மகாநாட்டார் எதிர்த்தனர். திரு. பொன்னம்பலத்தின் கொள்கையை எதிர்த்து ''வகுப்புவாதமும் தேசியமும்'' என்னும் சிறு பிரசுரத்தை ஹண்டி அவர்களின் முன்னுரையுடன் வெளியிட்டனர். எவ்வளவு முயன்ற போதிலும் பழைய செல்வாக்கைத் திரும்பவும் வாலிபமகாநாட்டாரால் பெற முடியவில்லை. நாட்டிலிருந்த அரசியல் சூழ்நிலையே இதற்குக் காரணம்.

### மறுமலர்ச்சியின் பயன்

அரசியல் துறையில் வாலிபர் மகாநாட்டின் செல்வாக்குக் குறைந்த போதிலும் சமூகத்தின் பல்வேறு துறைகளிலும் அது ஏற்படுத்திய மறுமலர்ச்சியின் பயனை யாழ்ப்பாணம் இப்பொழுதும் அனுபவித்துக் கொண்டு வருகிறது. யாழ்ப்பாணத்தில் காணப்படும் சிறந்த பல கல்லூரிகளைக் கட்டி எழுப்பியவர்கள் வாலிபர் மகாநாட்டைச் சேர்ந்தவர்களே. தமிழ் மக்களிடத்து காணப்படும் மொழி உணர்ச்சிக்கும் வித்திட்டவர்களும் அவர்களே. இப்பெறுபேறுகளை இந்நூலாசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

இந்நூலில் இரண்டாவது பகுதியில் காணப்படும் கட்டுரைகள், சொற்பொழிவுகள் ஹண்டி அவர்களால் 1941-ம் ஆண்டு தொடக்கம் 1973-ம் ஆண்டு வரைக்கும் உள்ள காலத்தில் நிகழ்ந்தவையாகும். இவை அக்காலத்து காலக்கண்ணாடியாக விளங்குகின்றன. கல்வி, சமயம், இலக்கியம், சமூகம், அரசியல் முதலியன சம்பந்தமான பல்வேறு விஷயங்களைத் தமக்கே சொந்தமான லாவகமான நடையில் விளக்கியுள்ளார். இக்கட்டுரைகள் மூலம் தமிழ்மொழிக்கு இழந்த உரிமையை மறுபடியும் பெற்றுக் கொடுப்பதற்கு அவர் எடுத்த முயற்சிகளை நன்கு அறியலாம். இந்நூல் சென்ற ஐம்பது ஆண்டு காலத்து இலங்கைச் சரித்திரத்தை அறிந்து கொள்வதற்கும் பேருதவியாக இருக்கிறது. ஆகவே இந்நூலை எழுதியவர்களுக்கும் வெளியிட்டோருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளோம்.

கடைசியாக ஒரு குறையை எடுத்துக் காட்ட வேண்டும். சோதனை மிக்க ஹண்டி அவர்களின் சரித்திரத்தைச் சுருக்கமாக வேணும் இந்நூலில் சேர்க்காதது ஒரு குறையாக ... படவேண்டும்.

---

## சிறுகதை

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ராசா...., பின்னுல போய் டிக்கட்டை எடுத்துத் தாறன் தம்பி....'' — ஆச்சி கெஞ்சியவாறே பின்னால் டிக்கட் எடுக்கச் செல்லும் அவசரத்தோடு அவதானமாக இறங்கினாள்.

சாரதி தனது ஆசனத்தில் இருந்து ஆத்திரத்துடன் எழுந்தார். அந்த வெற்றிலைப் பெட்டியை அலாக்காகத் தூக்கி அந்த மிதிபலகையில் வைத்துக் காலால் உதைத்து விடுகின்றார். நிலத்தில் சிதறிப் பரவியது வெற்றிலைப் பெட்டி.

சித்திரவதைப்படுத்தப்பட்ட நெஞ்சோடு அதைப் பரிதாபமாகப் பார்த்தாள் ஆச்சி. ''சீதேவியைச் சிதைத்திட்டுப் போறையே தம்பி.....'' —ஆச்சி முணுமுணுக்கின்றாள். பஸ் அசைகின்றது.

பஸ் அசையத்தொடங்கி இரண்டு செக்கன்டும் இருக்காது. ''அம்மா'' என்று அலறினார் சாரதி. பஸ் தடுமாறி தெய்வாதீனமாகத் தடம்புரளாமல் நிற்கின்றது அந்த கொதிநீரால் அவர்முகம் அபிஷேகம் செய்யப்பட, மரண அவஸ்தைப்பட்டுத் துடித்துக் கொண்டிருந்தார் சாரதி 'ரேடியேற்றரின்' மூடி பறந்து கொதிநீர் பாய்ந்து கொண்டிருந்தது.

எல்லோரும் பஸ்ஸை விட்டுப் பாய்ந்து இறங்குகின்றனர். அத்தனைபேரும் தங்கள் கைக்கடிகாரங்களில் கண்ணை வைத்து தெருவைக் கண்காணிக்கின்றனர் — அடுத்த பஸ்ஸின் வருகையை எதிர்நோக்கி, காரியாலயத்திற்குத் தாமதமாகிவிடுவோமோ என்ற கவலை அவர்களுக்கு.

சாரதியை நாலும் நடாத்துநரும் -எங்களையும் கொதிநீர் வரவேற்க- சேர்ந்து தூக்கி காற்றுப்பட வீதியருகே அவரைக் கிடத்துகின்றோம். அவர் வேதனையால் துடிக்கின்றார். வேடிக்கை பார்க்க வென்றே கூட்டம் கூடிவிட்டது. அந்தக் கூட்டத்தில் நுழைந்தவாறே வெற்றிலைப் பெட்டி ஆச்சி சாரதியை நெருங்கினாள். அலறியவாறே அவனை வாரியணைத்துத்தனது மடியில் கிடத்தி, அவனது முகத்தைத் தனது சேலைத்தலைப்பால் ஒற்றி விடுகின்றாள். அவள் முகத்தில்தான் எத்தனை வாட்டம்....? என்ன கருணை....?

(யாவும் கற்பனை)

---

## உங்கள்..,

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பின் பேரில் அது நடைபெற வேண்டும்.

இறுதியாக ஒரு எச்சரிக்கை உணர்ச்சிக்கொந்தளிப்புடைய குழந்தைகளே பெரும்பாலும் விபத்துக்குள்ளாகின்றன என்று உளவியல் அறிஞர்கள் கருதுகின்றனர், ஆகவே உங்கள் குழந்தை பயம், கோபம், கவலை, பொறுமை போன்ற உணர்ச்சிகளால் தீவிரமாகப் பாதிக்கப்படாமல் மகிழ்ச்சியாக இருக்கிறது என்பதை அடிக்கடி உறுதிசெய்து கொள்ளுங்கள்.

(ஆதாரக் கருத்துக்கள் சில:
டாக்டர் ஜொலி)

---

## பூநாகம் . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

என்னடாவெண்டால் குமார் வேண்டாம் சிங்களவே கட்டி வைப்பம் எண்டு நிக்கினம்.

''இதென்டா வம்பாப் போச்சு'' சோமையரின் உள்ளத்தில் ஆத்திரமும், ஏமாற்றமும் கொழுந்துவிட்டு எரிந்தன. ஆனால் தன் திட்டம் தவிடு பொடியாவதற்கு மகனும் ஒரு காரணமாய் இருக்கிறான் என்பதாலும் விஷயம் தலைக்கு மேல் போய் விட்டதோ என்ற நினைவாலும் அடங்கிப்போய் நின்றார்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்வெளியில் சாதனைப் படிக்கட்டுகள்

**1903**

ரஷ்யாவைச் சேர்ந்த ஸோல் கோஸ்கி என்பவர் ராக்கெட் செய்யவேண்டிய முறைகளை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்து கட்டுரைகள் எழுதி, ராக்கெட் யுகத்தைத் தொடக்கிவைத்தார்.

**1926**

திரவ அமிலங்களைக் கொண்ட ராக்கெட்டை முதன்முதலில் வானவீதியில் செலுத்தினர், அமெரிக்காவைச் சேர்ந்த கோடர்கு. ஆனால் அது அதிக உயரம் செல்லவில்லை. 'பொத்' என்று கீழே விழுந்துவிட்டது. அவரும் மனமுடைந்தார். ஆனால் அவருடைய விஞ்ஞானக் கொள்கைகள் பிரபல்யம் அடைந்தன.

**1931-1948**

உலகப் போர் முடிந்தது. ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்குக் குடியேறிய விஞ்ஞானியின் துணைகொண்டு அமெரிக்கா 244 மைல் செல்லக்கூடிய ஒரு ராக்கெட்டைக் கண்டுபிடித்தது. ரஷ்யாவும் மேற்கு ஜெர்மனிய விஞ்ஞானிகளின் துணையுடன் ராக்கெட்டைத் தயாரித்தது.

**1957**

விண்வெளிப் போட்டியில் முதல் ரவுண்டில் ரஷ்யாவே வெற்றிபெற்றிருக்கிறது. 'ஸ்புட்னிக்' என்ற செயற்கைக் கோளைப் பூமியைச் சுற்றச்செய்தது. நவம்பர் 9ந் தேதி லைக்கா என்னும் நாயை அந்த ராக்கெட்டுக்குள் வைத்து விண்வெளிக்கு அனுப்பியது.

**1958**

அமெரிக்கா தனது முதல் விண்கோளைச் செலுத்தியது. 'வேன் ஆலன் பெல்ட்' என்ற கதிரியக்கம் விண்வெளியில் இருப்பதைக் கண்டுபிடித்தது. ஆனால் திரும்பிவரும்போது ராக்கெட் எரிந்துவிட்டது. டிசம்பர் மாதம் அமெரிக்கா சந்திரனை நோக்கி அனுப்பப்பட்ட அமெரிக்க ராக்கட் கீழே விழுந்துவிட்டது.

**1959-1960**

அமெரிக்கா செலுத்திய 'எக்ஸ்ப்ளோவர்' என்ற விண்கலம் பூமியைப் புகைப்படம் எடுத்து அனுப்பியது; மற்றொரு கலமான 'தைரோஸ்' உலகின் பல பாகங்களிலும் பருவநிலையை ஆராய்ந்து பூமிக்குச் செய்திகளை அனுப்பியது.

**1961**

விண்வெளி யுகத்தின் முக்கியமான ஆண்டு இது. ஏப்ரல் மாதம் 12ந் தேதி ரஷ்யாவைச் சேர்ந்த யூரி ககாரின் 'ஸ்புட்னிக்' என்ற விண்வெளிக் கப்பலில் உலகை ஒருமுறை வலம்வந்து, உலகின் முதல் விண்வெளி வீரரானர். இவர் விண்வெளியில் இருந்த நேரம் 1 மணி 25 நிமிடங்களாகும்.

**1962**

அமெரிக்கா 'டெல்ஸ்டார்' என்ற செயற்கைக் கோளை விண்வெளிக்கு அனுப்பியது. இதன் உதவியால் ஆயிரக்கணக்கான அமெரிக்க மக்கள் ஐரோப்பியநாடுகளில் நடக்கும் டெலிவிஷன் நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்கள். இந்தியாவில் விண்வெளி ஆராய்ச்சிக் கமிட்டி அமைக்கப்பட்டது.

**1963**

ரஷ்யாவில் தும்பா ராக்கெட் நிலையம் செயற்பட ஆரம்பித்தது. வாலண்டினு தெரன்கோவா என்ற பெண்மணியை முதன்முறையாக ரஷ்யா விண்வெளியில் பறக்க வைத்துச் சாதனைபுரிந்தது.

**1964**

மூன்று அமெரிக்க விண்வெளி வீரர்கள் ராக்கெட்டில் உலகை மூன்று முறைவலம்வந்தார்கள். ரேஞ்சர் என்ற மற்றொரு அமெரிக்க ராக்கெட் சந்திரனுக்கு மிகச் சமீபமாகச் சென்று திரும்பியது.

**1965**

விண்வெளி ஆராய்ச்சியில் ரஷ்யா ஒரு சாதனையைப் புரிந்தது. மார்ச் 11ந் தேதி அலக்சாண்டர் லினுய் என்பவர் விண்வெளிக் கலத்திலிருந்து இறங்கி விண்வெளியில் நடந்து காட்டினர். அமெரிக்கா விடுத்த ஜெமினி விண்வெளிக்கலம் பூமியை 225 தடவை வலம் வந்தது.

**1966**

ரஷ்யா தனது 'லூனு -9' என்ற விண்வெளிக்கலத்தை சந்திரனில் இறக்கிக் காண்பித்தது. அமெரிக்க கலம் 'சாவேயர்' சந்திரனில் இறங்கியது.

**1967**

ரஷ்யா ராக்கெட் 'சோயுஸ்—1' சந்திரனுக்கு செல்லுகையில் வழி தடுமாறி உடைந்தது. உள்ளே இருந்த விண்வெளிவீரர் வேலண்டா கோமால் இறந்தார். தும்பா ராக்கெட் நிலைத்திலிருந்து இந்தியாவின் முதல் ராக்கெட் ரோகிணி வான வீதியை அடைந்தது.

**1968**

அமெரிக்கக்கலம் சர்வேயர் வான வீதியிலிருந்து உலகை 21,000 தடவை படம் எடுத்தது. இப்புகைப்படங்களைக் கொண்டு உலகின் தட்பவெட்ப - மழை அளவுகளைத் துல்லியமாக ஆராய முடிந்தது.

**1969**

1969 ம் ஆண்டு ஜூலை 20-ம் தேதி மனிதனால் மறக்க முடியாத நாள் அன்றுதான் அமெரிக்க விண்வெளி வீரர்கள் சந்திரனில் காலடி வைத்தார்கள். வைத்தவர் நீல் ஆம்ஸ்ராங்க் ஆவார்.

**1970**

ரஷ்யாவினல் செலுத்தப்பட்ட 'லூனு - 16' சந்திரனை அடைந்து மேற்பரப்பில் 14'' ஓட்டைகளைப் போட்டு சந்திரனின் கல்லையும், மண்ணையும் பூமிக்குக் கொண்டு வந்தது.

**1971**

அமெரிக்க ராக்கெட் 'மாரினர்' செவ்வாயை அடையப் பூமியை விட்டுப் புறப்பட்டது.

**1972—1973**

ஏழு ஆண்டுகளாக விண்வெளியில் செலுத்தப்பட்டு சுற்றிக்கொண்டிருந்த ஸ்கைலாப்பில் மனிதர்களை அனுப்பி வைத்தது அமெரிக்கா. இந்த மனிதர்கள் ஸ்கைலாப்பில் 84 நாட்கள் தங்கியிருந்து புதிய சாதனையை ஏற்படுத்தினர்கள் அவர்கள் அங்கு தங்கியிருந்து மனிதன் புவியீர்ப்பை விட்டு விலகினல் மனித உடலில் ஏற்படும் மாறுதல்களை ஆராய்ச்சி செய்தார்கள்.

**1974**

வெள்ளியையும் புதனையும் புகைப்படம் எடுத்தது. அமெரிக்க விண்வெளிக்கலம் செவ்வாய்க் கிரகத்தை ஆராயச் சென்ற மாரினர் அருமையான புகைப்படங்களை அனுப்பி வைத்தார்.

**1975**

இந்தியாவின் முதல் செயற்கைக் கோள் ஆரியப்பட்டா வான வீதியை அடைந்தது. அமெரிக்காவும், ரஷ்யாவும் சேர்ந்து வான வீதியில் ஆராய்ச்சி நடத்தின. விண்வெளியில் அப்பலோவையும், ஸோயுஸ் ராக்கெட்டுகளும் சந்தித்துக் கொண்டார்கள். வானத்தில் மனிதனின் இதயத் துடிப்புப்பற்றி இரு நாட்டவரும் ஆராய்ந்து கொண்டார்கள்.

**1976**

ரஷ்யக் கோள் 'ஸோயுஸ்' வான வெளியில் மீன் முட்டை இட்டுக் குஞ்சுபொரிக்க வைத்தது, அதிக செலவுடன் செய்யப்பட்ட 'வைக்கிங் ராக்கெட் செவ்வாயை நோக்கிப் புறப்பட்டது.

**1977**

செவ்வாயில் இரும்பு, கல்சியம், அலுமினுயம் போன்றவை இருப்பதாக 'வைகிங்' கோள் செய்தி விடுத்தது. வியாழன், சனி கிரகங்களின் சுற்றளவு, பரப்பு என்பன போன்ற விபரமும் தெரிவிக்கப்பட்டது.

**1978**

அமெரிக்கர்கள் 89 நாட்கள் விண்வெளியில் இருந்த சாதனையை முறியடித்த ரஷ்யர்கள் 140 நாட்கள் விண்வெளியைச் சுற்றினர்கள். ரஷ்யா தனது 1001-வது செயற்கைக் கோள் வான வீதியில் பறக்க விட்டது.

**1979**

அமெரிக்க வாஜேஜர் சனி கிரகத்தின் வளையங்களைப் புகைபடம் எடுத்தது. வியாழன் கிரகத்தைச் சுற்றி 50,000 மில்லியன் வோட்ஸ் கொண்ட மின்சாரம் பாய்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் 2-வது செயற்கைக் கோளான பாஸ்கரா வான வீதியில் பறக்கத் தொடங்கியது. 14 ஆண்டுகளுக்கு முன் விண்வெளியில் அனுப்பப்பட்ட ஸ்கைலாப் இந்துமாக்கடலின் தென்பகுதியில் விழுந்தது.

ஆதாரம்—ஆனந்தவிகடன்

தொகுப்பு:

வசந்தி குணராஜா

யாழ். இந்து மகளிர் கல்லூரி.

---

## விடியலுக்கு— ஒரு சாபம்.

ஏ..... விடியலே!
நீ நிகழும் போது
எல்லோர் வாழ்வும்
விடியுமெனின்
நீ நிகழ்......
இல்லையெனில் நீ
நிகழாதே.....!
இருளை ஓட்ட நீ
எண்ணுகையில்
எங்களனத்தின் ஒருபகுதி
துன்பத்தின் ஆரம்பத்தைத்
தொடுகிறதெனின் நீ
நிகழ்ந்துதான் என்னபயன்?

சி. இரா. தனபாலசிங்கம்
(நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்.

---

க. பொ. த. (சாதாரண) பரீட்சை:

# உயிரியல்

### (பழைய பாடத் திட்டம்) வினவிடை-1

1. சுவாசம் என்றால் என்ன?

உணவு ஒட்சி ஏற்பட்டு சக்தி வெளியேற்றும் முறை.

2. சுவாச சமன்பாடு

$$C_6H_{12}O_6 + 6O_2 \rightarrow 6CO_2 + 6H_2O + \text{சக்தி.}$$

சக்தி:- தாவரத்தினல் சூரிய ஒளி உறிஞ்சப்படுகின்றது.

3. வெவ்வேறு உறுப்புக்களின் சுவாச உறுப்புக்கள் எவை?

அமீபா:- உடல்பரப்பு, மண்புழு:- ஈரலிப்பானதோல், பூச்சிகள்:- வாதனளி, சிலந்தி: ஏட்டுநுரையீரல், மீன்:- பூக்கள், தவளை:- தோல், வாய்க்குழி, சுவாசப்பைகள், ஊர்வன, முலையூட்டிகள்:- சுவாசப்பைகள்

4. மீனின் சுவாசப்பொறிமுறையை விளக்குக:

மீனின் சுவாச உறுப்புக்கள் பூக்கள் ஆகும். பூக்கள் தொண்டைப்பகுதியில்காணப்படுகின்றன. தொண்டை பூப்பிளவுகளினூடாக வெளியே தொடர்பு கொள்ளும். மீன் வாயை திறக்கும் போதுவாய்க்குழியின் உள் அமுக்கம் குறையும். நீர்வாய்க்குழியின் உள் செல்லும் வாய் மூடப்படும். தொண்டைச் சுவர் சுருக்கப்படும். நீர் பூப்பிளவுகளினூடாக வெளியே செல்லும். நீரில் உள்ள ஒட்சிசன் பூவிலுள்ள குருதியை அடையும். குருதியில் உள்ள காபனீர்ரொட்சைட் நீரையடையும்.

5. மனிதனின் சுவாசப் பாதையின் பகுதிகள் எவை?

வெளிநாசித்துவாரம், நாசிக்குழி, உள்நாசிக்குழி, தொண்டைக் குரல்வளை, வாதனளி, சுவாசப்பைகுழாய், சுவாசப்பைச்சிறுகுழாய், சிற்றறைக்கான்.

6. சுவாசப்பையின் கட்டமைப்பு, அவற்றின் தொழில் விபரம் எவை?

(i) சுவாசப்பைநாடி: இதயத்திலிருந்து ஒட்சிசன் ஏற்றவுள்ள குருதியை சுவாசப்பைக்கு கொண்டு செல்லல்.

(ii) சுவாசப்பை நாளம்: ஒட்சி ஏற்றிய குருதியை இதயத்துக்கு கொண்டு செல்லல்.

(iii) சுவாசப்பைக் குழாய், சுவாசப்பை சிறுகுழாய்:- சுவாசப்பைக்கு உள்ளேயும், சுவாசப்பையிலிருந்து வெளியேயும் வளியை செல்லவிடும்.

(iv) சிற்றறை:- வளியை அடைத்து வைத்திருக்கும் பகுதி.

(v) மயிர்த்துளைக் குழாய்:- நாடி, நாளத்தையும் இணைத்தல்.

(vi) சிற்றறைக்கலம்:- சிற்றறையின் எல்லை.

7. மனிதனின் சுவாசப் பொறிமுறையை விளக்குக:

**வளி உள்ளெடுத்தல்**

விலா எலும்பு இடைத்தசை சுருங்கும், விலா எலும்பும் நெஞ்சறை சுவரும் வெளி நோக்கியும், மேல் நோக்கியும் அசையும். மார்புப் பட்டை வெளி நோக்கியும் மேல் நோக்கியும் அசையும். பிரிமென் தகடு தசை சுருங்கும். பிரிமென்தகடு கீழ் நோக்கி அசையும். நெஞ்சறையின் கன அளவு கூடும், நெஞ்சறையின் அமுக்கம் குறையும், சுவாசப்பை அமுக்கம் வெளியமுக்கத்திலும் பார்க்ககுறையும் எனவே வெளிவளி சுவாசப் பாதையினூடாக சுவாசப்பைகளை அடையும்.

8. ''சுகதேகியாளுஅம் கடும் வேலை செய்யும் போது தசைப் பிடிப்பு ஏற்படுகிறது'' இதனை விளக்குக:

கூடிய வேலை செய்ய கூடிய சக்தி தேவை. கூடிய சக்தி பெற கூடிய ஒட்சியேற்றம் தேவை. கூடிய ஒட்சி ஏற்றம் நடக்கக் கூடிய ஒட்சிசனும், உணவும் தேவை. கூடிய ஒட்சிசன் சுவாசப் பையினல் கொடுக்க முடியாது. எனவே

### தம்பு விவேகராசா

கலன்களில் காற்று இன்றிய சுவாசம் நடக்கின்றது. காற்று இன்றிய சுவாசத்தின்போது உணவு பகுதி ஒட்சி ஏற்றம் நடக்கும். பகுதி ஒட்சி ஏற்றத்தினல் இலற்றிக்கமிலமும், காபனீரொட்சைட்டும் உண்டாகும். இலற்றிக்கமிலம் தசைகளில் சேகரிக்கப்படும் போது தசைப்பிடிப்பு ஏற்படுகின்றது.

9. உயிர் உள்ளவைகளின் சிறப்பு இயல்புகள் எவை?

போசணை, அசைவு, உணர்ச்சி, சுவாசம், கழிவகற்றல், வளர்ச்சி, இனப்பெருக்கம், முதல் உருவால் ஆனவை.

10. தாவரச் சிறப்பியல்புகள் எவை?

பச்சையம் உண்டு, தற்போசணை, இடப்பெயர்ச்சி இல்லை, கலங்களைச் சூழ்ந்து கலச்சுவர், உணர்ச்சி குறைவு, எல்லையற்ற வளர்ச்சி, மையமூர்த்தம் இல்லை.

11. ஒளித் தொகுப்பு என்றால் என்ன?

பச்சையம் உள்ள தாவரம் ஒளி உள்ளபோது காபனீரொட்சைட்டையும், நீரையும் உபயோகித்துக் குளுக்கோசு தயாரித்தல்.

12. ஒளித்தொகுப்புச் சமன்பாடு யாது?

$$6CO_2 + 6H_2O \xrightarrow[\text{பச்சையம்}]{\text{ஒளி}} C_6H_{12}O_6 + 6O_2$$

13. ஒளித் தொகுப்புச் செயல் முறையை ஒழுங்கில் தருக?

பச்சையம், ஒளிச் சக்தியை உறிஞ்சும். ஒளிச்சக்தி, நீரை ஒட்சிசனகவும், ஐதரசனகவும் பிரிக்கும். ஒட்சிசன், வெளியேறும். ஐதரசன், காபனீரொட்சைட்டுடன் சேர்ந்து குளுக்கோசு உண்டாகும்.

14. உணவின் கூறுகள் எவை?

காபோவைதரேற்று. புரதம், கொழுப்பு, விற்றமின், கனியுப்பு, நீர்.

15. மனித உணவுக்குழாயில் சிரணியாது உறிஞ்சப்படுவன யாவை?

9 ம் பக்கம் பார்க்க)

---

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## இம்மாணவிக்கு நல்ல எதிர்காலம்

'மாணவர் எண்ணம்' பகுதியில் அண்மையில் வெளிவந்த 'பொழுதுபோக்கு வருவாயும் தருகிறது' என்ற கட்டுரை பல சிறப்பு அம்சங்களைக் கொண்டிருந்தது. அக்கட்டுரை மாணவர்களுக்குப் பெரிதும் உதவுமென்பது என் கருத்தாகும். மேற்படி கட்டுரையை எழுதிய யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி இ சந்திரகுமாரிக்குச் சிறந்த எதிர்காலம் உண்டென்பதை இக்கட்டுரை உணர்த்துகிறது.

க. சிவசங்கரநாதன்
தெய்வங்கேணி வீதி,
...ரால்.

---

## கொஞ்சம் சிரியுங்கள்!

ஒருவர்: என்ன பாம்புடனே படத்திற்கு வந்திட்டாயே?

பாம்பாட்டி: ஆமாங்க, நீண்ட நாளா இந்த நீயா படம் பாக்கவேண்டுமென்று ஒரே ஆய்க்கினைப்படுத்திச்சு அதுதான் கூட்டிக்கிட்டுவந்தேன்.

ஃ ஃ ஃ

ஒருவர்: ஏன் இந்த இசைக் குழுவினர் ஹெல்மெட் அணிந்துகொண்டு நிகழ்ச்சி நடத்துகிருர்கள்?


மற்றவர்: அவர்களுக்கு ஏற்கனவே கல்லெறி வாங்கி அனுபவமுண்டு.

செல்வன் பழனிலோகதாஸ்
யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ஸ்ரீதர்** (யாழ். நகர்) தினசரி 10-30, 2-00, 6-00 & 930
தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்-லதா
**மீனவநண்பன்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-15, 6-00 & 9-30
ஜெய்கணேஷ், சுந்தரராஜன், நம்பியார், கே. ஆர். விஜயா, லதா, ஸ்ரீபிரியா, முத்துராமன்



**சுப்ரபாதம்**
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
**வெலிங்டன்** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 6-00, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
**பாலும் பழமும்**

**லிடோ** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
சிவாஜி-சரோஜாதேவி
**பாகப் பிரிவினை**

**ஹரன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன் - லதா
**வீட்டுக்கு வந்த மருமகள்**

**வெஸ்லி** (மாவிட்டபுரம்)
தினசரி 6-15, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி - தேவிகா
**அன்னை இல்லம்**

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-15, 9-30
சனி-ஞாயிறு 2-15
**ஞானக்குழந்தை**

**வின்ஸர்** (யாழ்நகர்)
Daily at 10-30 A.M., 2-30, 4-30, 7-00 & 9-30 P.M. only
★ BARRY NEWMAN ★ SUZY KENDALL
in
**FEAR IS THE KEY**
Scope-Color Thrill & Action

**மனோகரா** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜனத்திரள் நிறைந்த 4வது வாரம்
தினசரி 10-30, 2-30, 6-00 & 9-30
ஜெய்சங்கர், சீமா, கே. ஆர். விஜயா
**ஒரேவானம் ஒரேபூமி**
(வண்ணக்கலர்)

**SANTHI** (JAFFNA) DAILY 5 SHOWS
10-00, 1-00, 4-00, 7-00 & 10-00
★ CHARLES BRONSON ★ JIM BROWN
**"THE DIRTY DOZEN"**
ACTION PACKED COLOR MOVIE

**ராணி** (யாழ்நகர்)
Daily 10-30, 2-15, 4-30, 7-00 & 9-30
EVELYNE KRAFT, LI H SIU-HFIEN
in
**MIGHTY HIMALAYAN MAN**
AN EXPLOSIVE MOVIE

மகத்தான நத்தார் திரை விருந்து.....?

12-ம் திகதி முதல்...
**ராணி** - யாழ்ப்பாணம்
கெப்பிட்டல் - கொழும்பு.
தினசரி 10-30, 2-30, 6-00, இரவு 9-30
செவன் ஆர்ட்ஸ் அளிக்கும்

# ஒருதலை காதல்



ஹிந்திப்பட ரசிகர்களுக்காக...!
"சத்யம் சிவம் சுந்தரம்" திரைப்படத்தில் லதாமங்கேஷ்கார் பாடும் பாடலுக்கு ஹிந்தித்திரை உலகின் கவர்ச்சிக்கன்னி ஜீனத் அமான், காதல் இளவரசன் சசிகபூர் நடிக்கும் காட்சி!

பொப்பிசைப் பிரியர்களுக்காக...!
கிரேக்க நாட்டின் பிரபல பாடகர் அல்பிராடோ பெஞ்சமின் கிரேக்க மொழியில் பாடியுள்ள துள்ளாட்டப் பாடல்!

சண்டைப் பிரியர்களுக்காக...!
பயங்கரமான சண்டைக்காட்சிகள்!

தமிழ்ப்பட சுவைஞர்களுக்காக...!
உருக்கமான கதை! உணர்ச்சிகரமான வசனம்!
உள்ளத்தைத் தொடும் நடிப்பு — நகைச்சுவை.



இத்தனைக்கும்
"ஒருதலை காதல்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வனேஸ்ட் நெளிவுள்ள
கூரைத்தகடுகள்
35 U S G & 32 U S G
நீளம் 6 அடி முதல் 10 அடிவரை
சி ஐ சி பெயின்ற் வகைகள்
கதிர் ஹாட்வெயர்ஸ்
(TILLY'S GROUP)
11/1-2, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். போன்: 7130

## பாகிஸ்தானுக்குப் பாடம் புகட்டுமாறு சோவியத், தேசாய்க்கு யோசனை கூறியதா?

புதுடில்லி, டிச. 9

இந்தியாவில் ஜனதாக்கட்சி ஆட்சியிலிருந்தபோது பாகிஸ்தானுக்குப் பாடம் ஒன்று புகட்டுமாறு சோவியத் யூனியன் தம்மிடம் யோசனை கூறியதாக அன்றைய பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் சொன்ன தகவலுக்கு அரசின் பதிவேடுகளில் எதுவித சான்றுகளும் கிடையாது.

இவ்வாறு இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ் நேற்றுப் பாராளுமன்றத்தில் கூறினர்.

பாகிஸ்தான் அரசுடனும், பாகிஸ்தான் மக்களுடனும் நெருக்கமான நல்லுறவைக் கொண்டிருக்கவே இந்தியா உறுதிபூண்டுள்ளது என்றும் திரு. நரசிம்மராவ் தெரிவித்தார். (இ)

நத்தார் புதுவருட விற்பனை
பொலித்தீன் பேக்குகள் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. லேடன் தயாரிப்புகள், கோல்டன் பிரசியர்கள், துப்டெக்ஸ்-வெயாங் கொட சலூசலா பிடவைகள் மிக மலிவு விலையில் பெற்றுக் கொள்ள
சிக்கோ டிரேடர்ஸ்
43, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 684

# இலங்கைக்கு இந்தியா வழங்கும் ரூ 200 கோடி உதவி

## இங்கு வரும் பாரத நிதி அமைச்சர் ஜே. ஆர்., பிரேமாவுடன் பேச்சு நடத்துவார்

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்திக்கு இந்தியா வழங்கவிருக்கும் 200 கோடி ரூபா உதவி குறித்து இம்மாத நடுப்பகுதியில் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இங்கு வரும் இந்திய நிதியமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன் இலங்கை ஜனதிபதி, பிரதம மந்திரி ஆகியோருடன் பேச்சு நடத்துவார்.

இத்தகவலை நிதியமைச்சர் திரு. ரொனி டீமெல், தமது அலுவலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இம்மாதம் 14ந் திகதி இலங்கை வரும் நிதியமைச்சர், இரு நாடுகளுக்குமிடையேயான பொருளாதார ஒத்துழைப்புக் குறித்தும் ஜனதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன, பிரதம மந்திரி திரு. ஆர். பிரேமதாசா, நிதியமைச்சர் திரு. ரொனி டீமெல் ஆகியோருடன் பேச்சு நடத்துவார்.

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் ஒருவர் இலங்கை வருவது இதுவே முதல் தடவையாகும். (ம-இ)

யாழ்ப்பாணப் பாடசாலைகள்
விளையாட்டுச் சங்கம்
உதைபந்தாட்டப்போட்டி
1980
இறுதிப்போட்டி
1-ம் குழு (1st XI)
இடம்: மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானம்
காலம்: 7-1-80 ஞாயிறு பி. ப. 3-00 மணி
பி. ப. 3-00 மணி கொக்குவில் இந்து எதிர் வசாவிளான் ம. ம. வி.
பி. ப. 4-00 மணி நடேஸ்வரா எதிர் யூனியன்
பிரதம விருந்தினர்
பொ. மகேந்திரன் அவர்கள்
(பிரதி பொலிஸ் மா அதிபர் வட பிராந்தியம்)
வைத்தியகலாநிதி திருமதி ல. மகேந்திரன்
விருதுகளை வழங்குவார்கள்.
பிரவேசம் 2-00
குறிப்பு: 5-12-80-க்கு முன்னர் வழங்கப்பட்ட சகல அன்பளிப்புச் சீட்டுக்களும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.
கனகரத்தினம் ம. ம. வி. யாழ்ப்பாணம்.
க. மு. சா. ஹமீட்
உதைபந்தாட்டச் செயலர்
7558

## அந்தியேட்டி அழைப்பு

### திருமதி மங்கையர்க்கரசி ஜெயசீலன்

9-11-80ல் இறைவனடி எய்திய திருமதி மங்கையர்க்கரசி ஜெயசீலனின் அந்தியேட்டிக் கிரியைகள், 9-12-80 செவ்வாய்க்கிழமை, அச்சுவேலி, இராசவீதியிலுள்ள இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் சமுகமளித்து அன்னரின் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

அன்னரின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் இதன் மூலம் நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில் தனிப்பட்ட முறையில் நன்றி தெரிவிக்கமுடியாமைக்கு வருந்துகின்றோம்.

திரு. திருமதி ச. வீரசிங்கமும்
அன்னரின் கணவரும், சகோதரரும்.

இராச வீதி,
அச்சுவேலி. 7548

## எம் ஜி ஆர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. இராமச்சந்திரன் மீது வீசப்பட்டதாகவும், கத்திகுறி தவறி ரயில்பெட்டியில் பட்டுக் கீழே விழுந்ததாகவும் உடன் முன்னள் கிராமாதிகாரி கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

முதல்வருடன் தமிழக மின்சக்தி அமைச்சர் திரு. எஸ். இராமச்சந்திரனும் மேலவை உறுப்பினர் ஒருவரும் சென்றதாகவும் ரயில் நிலையத்தில் எம். ஜி, ஆருக்கு மாலையிடக் காத்திருந்த கட்சித்தொண்டர்களிடம் மாலையை வாங்குவதற்கு கதவு திறக்கப்பட்ட போதே இக்கத்திவீச்சு இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## சாதியைக் ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி

திரு. இராசலிங்கம் தெரிவித்தார்.

இவரது கூற்றுக்குப் பதிலளிக்கும் வகையில் பேசிய அமைச்சர் திரு. சமரவீர கூறியதாவது:-

சாதிப்பூசலை சட்டத்தால் தீர்க்கமுடியாது. மக்கள் தாமாகவே உணர்ந்து சாதிப் பிரச்னையை அடியோடு ஒழிக்க வேண்டும். இலங்கையில் வடக்கிலேயே இந்நிலை இருந்துவருகிறது

தமிழ்மக்களில் ஒருபகுதியினர் திருமணம்செய்து வாழ்க்கையில் காலடி எடுத்துவைக்கும்வேளையில் திருமணப் பதிவாளர்கள் பதிவுசெய்ய மறுப்பது வேதனைக்குரியது. எனவே எந்தெந்தப்பகுதிகளுக்கு திருமணப்பதிவாளர்கள் தேவை என்று கூறுனல் அவ்வப்பகுதிகளில் மேலதிக திருமணப்பதிவாளர்கள் நியமிக்கப்படுவர். (இ)

## நால்வருக்கும் ரிமாண்ட்

(யாழ்ப்பாணம்)

புலோலி மேற்கு தாலிக்கொடி கொள்ளை தொடர்பாக பொலிசாரினல் கைதுசெய்யப்பட்ட நான்கு சந்தேக நபர்களும் பருத்தித்துறை நீதவான் திரு. எஸ். மகேசன் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களான அருணகிரி, விஜயபாலா, பத்மகுமார், சந்திரலிங்கம் ஆகிய நால்வரையும் இம்மாதம் 19ந் தேதி வரை ரிமாண்டில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ)

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் சி. பா. பாலசுப்பிரமணியம் (ராசா)



அமரர் சட்டத்தரணி சிவகுரு பாலசிங்கம் பாலசுப்பிரமணியம் அவர்களின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர்வளையங்கள் சாத்தியும், அன்னரைக் கௌரவித்து எமது துயரங்களில் பங்குகொண்டோர் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். அத்துடன் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 09-12-1980 செவ்வாய்க்கிழமை பகல் 12-30 மணியளவில் அன்னரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்,

இங்ஙனம்
தாய்-மனைவி-பிள்ளைகள்
சகோதரர்-மைத்துனி

'பாலகிரி',
சாவகச்சேரி. 7532

## உயிரியல்

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

விற்றமீன், கனியுப்பு, நீர். குளுக்கோசு.

16. போசணையின் செயல் முறைகள் எவை?

உணவு உள் எடுத்தல், சீரணித்தல், உறிஞ்சப்படல், கடத்தல், சீரணியாது மலமாக வெளிவருதல்

17. உணவு சீரணிக்க உதவி செய்யும் சுரப்பிகள் எவை?

உமிழ்நீர்ச் சுரப்பிகள், ஈரல், இரைப்பைச் சுரப்பிகள், சதையம், குடற்சுரப்பி. குருட்டுக் குடல், பற்றீரியா.

18. சீரணிப்பு என்றால் என்ன?

சிக்கலான உணவு எளிய நிலையை அடைதல் சீரணிப்பு எனப்படும்.

19. சடைமுளையின் முக்கிய பகுதிகள் எவை?

சடைமுளை நாடி, உறிஞ்சும் மேலணி. பாற்குழாய், மயிர்த்துளைக் குழாய், சடைமுளை நாளம் என்பன

## மரண அறிவித்தல்

### சு. நாகலிங்கம்

கோப்பாயைச் சேர்ந்த சு. நாகலிங்கம் (முன்னள் முகாமையாளர், இலங்கை நூற்றல் நெய்தல் ஆலை ஸ்தாபனம், வல்லை) காலமாகிவிட்டார். இவர் தங்கம்மாவின் அன்புக் கணவரும், பத்திராதேவி, விவேகானந்தன் ஆகியோரின் தந்தையும், கனகராசாவின் சகோதரரும், கலாநிதி சிவநாதன் (விவசாயத் திணைக்களம் பேராதனை), ஞானேதயம் ஆகியோரின் மாமனரும், சங்கர், சிவரூபன், சபேஸ் ஆகியோரின் பேரனுமாவார் அன்னரது ஈமக்கிரிகைகள் இன்று (7-12-80) ஞாயிற்றுக்கிழமை கோப்பாயில் நடைபெறும். 7557

## மரண அறிவித்தல்

### வி. பி. சவிரிமுத்து

கரம்பொன் தெற்கைச் சேர்ந்த வி. பி. சவிரிமுத்து காலமானர். இவர், காலஞ்சென்ற தங்கராசத்தின் அன்புக் கணவரும், அல்பிரட் (இயக்குநர், ஊர்காவற்றுறை ப. நோ. கூ. ச.), லீன், டெனிஸ் (நுகேகொட புகையிரதநிலைய அதிபர்), ஜெறி மத்திய வங்கி), அர்சில், மகாராசா (துறைமுகக் கூட்டுத்தாபனம்), தேவராசா (மகேந்திரன் என்ஜினியேர்ஸ்), ஆனந்தராசா (வெளிநாட்டுத் தந்தி அலுவலக அதிபர்), சோதி (நைஜீரியா) ஆகியோரின் தந்தையும், சிசிலியா, பெனடிக்ற், சுகிர்தம், மணி, யோசவ் (ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்), கருணைகரம், ருக்மணி, இந்திரா, லியோகாரியர் (நைஜீரியா) ஆகியோரின் மாமனருமாவார். அன்னரின் பூதவுடல் இன்று ஞாயிற்றுக்கிழமை (7-12-80) மாலை 4 மணிக்கு ஊர்காவற்றுறை சேமக்காலையில் நல்லடக்கஞ் செய்யப்படும். 7543

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி 65-ம் இலக்க அச்சகத்தில் டிசம்பர் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. QJ 8948/78 The Eelanadu " 5 No 43.
Phone Eelanadu, Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org